சிவமயம்.

தமிழன்

ஒரு மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

"தவஞ்செய்வார் தங்கருமம் செய்வார்"
'எண்ணித்துணிக கருமம்'
"எவ்வ துறைவ துலக முலகத்தோ-
டவ்வ துறைவ தறிவு."

C. N. அனந்தராமைய சாஸ்திரி M. A, பண்டிதர் S. முத்துசுவாமிப் பிள்ளை, பத்திராதிபர்கள்.

தொகுதி V. } 1092 ஆடி, திருவனந்தபுரம்: AUGUST 1917. { பகுதி 6.

பொருள் அடக்கம்.

	விஷயம்.	பக்கம்.
1.	மாதசரிதம்	102
2.	The Royal Shastipurthi ...	103
3,	Milton's Last Poem ...	104
4.	பூமி, ...	105
5.	சந்திரகுப்தசக்கிரவர்த்தி சரித்திரம்	107
6.	வாயிட் ஜ்யார்ஜ் ...	111
7.	நாஞ்சிநாட்டு மருமக்கள் வழி மான்மியம்	113
8.	கண்ணபிரானும் கிழவனும் ...	120
9.	Mr. Motagu's Indian Speech	120

சந்தா விவரம்.

இந்தியா, இலங்கை, இரங்கூன்	ரூ.	2
வெளிநாடுகளுக்கு	ரூ.	3

குறிப்பு:—சந்தாத்தொகை எப்பொழுதும் முன்னதாகவே செலுத்தப்படவேண்டும்.

T. NAGASUBRAHMANYA RAO BROS,

PUBLISHERS, TRIVANDRUM.

THE "TAMILIAN"

A Monthly Anglo—Tamil Journal.

FOR

the Educated and the Masses, Women and Children

Annual Subcription Rs. 2

Strictly payable in advance.

SHORT STORIES: *a speciality.*

The best Medium for advertisement.

Advertisement rates per month.

Full page or 2 columns	Rs.	5—0—0
Half page or 1 column	,,	3—0—0
Quarter page or ½ column	,,	2—0—0

Contract rates on application.

All literary communications, books for review etc, should be addressed to Mr C. N. Ananta Ramaiya Sastri M. A. Editor, The "Tamilian," Trivandrum; all orders, remittances, advertisements etc, to

Messrs. NAGASUBRAHMANYA RAO BROS.,

Publishers, Trivandrum.

மாதசரிதம்

திருவோண விடுமுறை நிமித்தம் அச்சுக்கூடம் பூட்டப்பட்டிருந்ததனால் இந்த ஸஞ்சிகை வெளிவரச் சிறிது தாமதமாயிற்று. அடுத்த பத்திரிகை முதல் ஆங்கலமாதம் 2?-உக்குள் கட்டாயம் வெளிவரும் என்ற விஷயத்தைப் பத்திரிகாபிமானிகள் அறியவும்.

***

தோவாளை, அகஸ்தீசுவரம் என்னும் இரண்டு தாலூகாக்கள் அடங்கிய நாஞ்சினாடும் செங்கோட்டையும் திருவிதாங்கூரில், சுத்தத்தமிழ் நாடுகள் என்று யாவரும் அறிவர். எனினும் இம்மூன்று தாலூகாக்களிலுமுள்ள பிரதமக் கல்விச்சாலைகளில் மலையாளமே கற்பிக்கப்பட்டு வருகின்றது. தமிழர்கள் தம் தாய்மொழியை மறந்து மலையாளம் கற்பதனாலுண்டாகும் தீமைகளை யுணர்ந்த நாஞ்சினாட்டார் வெகுகாலமாகச் செய்துவந்த உழைப்பின் பயனாக, ஜனங்களுக்கு விருப்பமிருந்தால் மலையாளப்பாடசாலைகளைத் தமிழ்ப் பாடசாலைகளாக்கலாமென்று திவான் இராஜகோபாலாசாரியவர்கள் காலத்து ஒரு விதியுண்டாயிற்று. எனினும் ஜனங்கள் விரும்பிய பயன்முழுதும் கைகூடாதிருந்தனால் அவ்விஷயத்தைப்பற்றிய கிளர்ச்சியும் வாதமும் தொடர்ந்துகொண்டே இருக்க, அதனை உணர்ந்த தேசபாஷை வித்தியாப்பியாச டயரக்றர் ஸ்ரீமான் P. இராமசுவாமி ஐயரவர்கள், சிலவாரங்களுக்குமுன் கோட்டாற்றில் ஜனத்தலைவர்களின் 'கான்பரன்ஸ்' ஒன்று கூட்டுவித்து, பெரும்பாகத்தார் அபிப்பிராயப்படி, நாஞ்சினாட்டிலுள்ள எல்லாப் பிரதமக்கல்விச்சாலைகளிலும் தமிழை முதற்பாஷையாகவும், மலையாளத்தை நிர்ப்பந்த உதவிப் பாஷையாகவும் (Compulsory Second Language) கற்பிக்க, முடிவுசெய்திருப்பதாக அறிகின்றோம். இதற்காக ஸ்ரீமான் P. இராமசுவாமி ஐயரவர்களுக்கு, திருவிதாங்கோட்டுத் தமிழர்கள் என்ன கைம்மாறு செய்யினும் ஈடாகாது.

***

இத்தருணத்தில் ஒரு முக்கியமான விஷயத்தை ஸ்ரீமான் P. இராமசுவாமி ஐயரவர்களின் கருணையான பார்வைக்குக் கொண்டுவர நாம் கடமைப்பட்டவராக இருக்கிறோம். அதாவது, மலையாளப்பள்ளிக்கூடங்களில் முற்கூறியபடி தமிழ் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்து, இப்பொழுதிருக்கும் ஆசிரியர்கள் தலையில் பயிற்றுவிக்கும் பொறுப்பையும் ஏற்றினால் இவ்வேற்பாட்டினாலுண்டாகும் பயன் பூரணமாகாதென்பதே. மலையாளம் பள்ளிக்கூடங்களில் சாமானியமாகத்தமிழ் வாசிக்கத்தெரிந்த உபாத்தியாயர்களும் இருக்கக்கூடும். தமிழோ அத்தகைய வாசிப்புடையாரால் எளிதில் கையாடத்தக்க பாஷையல்ல. தமிழிலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சியுடையோர்க்கே தமிழ்ப் பாஷையை செவ்வையாகக் கற்பிக்கமுடியும். தமிழில் 'வர்னகுலர் ஹயர்' பரீட்சையில் தேர்ச்சியடைந்தவர்களைத் தெரிந்தெடுத்து இப்பள்ளிக்கூடங்களில் நியமித்தல் மிக உத்தமமான மார்க்கமாம். இவ்விஷயத்தை ஸ்ரீமான் ஐயரவர்கள் சிறிது கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

***

இவ்விடம் துரைத்தன மாதர் கலாசாலையில் இன்டர் மீடியற்று வகுப்பில் படித்துவரும் ஸ்ரீமதி A. டோரா அன்னம்மாள் என்னும் கிறிஸ்தவமாது, மதுரைத் தமிழ்ச்சங்கம் இன்டர் மீடியற்று பரீட்சையில் இரண்டாவதாகத் தேறிப் பரிசுபெற்றிருப்பதாயறிந்து மிகவும் சந்தோஷிக்கிறோம். ஆண் பாடசாலைகளிலும் தமிழ்ப்பயிற்சி குன்றிவரும் இக்காலத்தில் ஸ்ரீமதி அன்னம்மாளுடைய விஜயமானது, அக்கலாசாலைக்கும் அதன் தலைவிக்கும் மிகவும் பெருமையைக் கொடுக்கத்தக்கதே!

***

நமது மாட்சிமைதங்கிய மன்னர் பெருமானது ஷஷ்டிபூர்த்தி ஞாபகஸ்தாபன விஷயமாக நடைந்தவர் தங்கள் முற்றுபெற்று ஒரு "கைத்தொழில் விவசாயக் கலாசாலை" Techonological Institute ஸ்தாபனம் செய்ய யாவரும் ஒரேமுகமாய் உறுதிப்பாடு செய்திருப்பதும், அஃது மன்னர் பெருமான் திருவுளச்சம்மதம் பெறதிருப்பதும் மகிழத்தக்கதே. ஆனால் இப் பெரியஸ்தாபனத்துக்குப்போதுமான பொருளுண்டாவது அசாத்தியமெனவும், பிரிவாகும் தொகைக்குத் தக்கபடி ஏதேனுமொன்றை ஏற்படுத்துவதே நலமாமென்றும் ஒரு அபிப்பிராயம் எங்ஙனமோ உதயமாகிப் பத்திரிகைகளிலும் இடம் பெறத் தொடங்கிவிட்டது. இதனால் ஜனத்தலைவர்கள் மனந் தளர்வார்களானால் அதைப்போல் நிர்ப்பாக்கியமான சமபவம் வேறே உளதாகாது. அரியன செயதலே அறிவுடையோர் செயல். விடா முயற்சியினால் எவ்வினையும் கைகூடும். நமது திருவாழுங்கோடு இந்தப் பெரு நன்மை தரும் ஸ்தாபனததுக்குப் பொருளுதவி புரிய முடியாதபடி அவ்வளவு வறுமையுடையதல்ல. சிலர் தம் சிந்தனாசக்தியால் கண்டஞ்சும் வறுமையெல்லாம்

மனவுறுமையேயாம். இந்த ஸ்தாபனத்தால் விளையும் நலங்கள் எல்லாம் இந்நாட்டுக்கும் நம்மவர் சந்ததிகளுக்குமே. ஆதலின் இவ்விஷமாக நம்மவர் செலவு செய்யும் பணம் நம்மவரின் சந்ததிகளின் பிற்கால க்ஷேமத்திற்காகச் சேமித்துவைக்கும் உறுதி நிதியேயாகும். எனவே நம்மவர் அஞ்சுவது எதற்காகவோ? நமது ராஜபக்தியைக் காட்டுவதற்கு இதுவே தற்றருணம். நமது தேசக்ஷேம விருப்பத்தை தெரிவிப்பதற்கு இதுவே தற்றருணம். கனவான்களே சோர்வடையாது எடுத்த முயற்சியை இனிது முடிக்க முயலுங்கள்.

ஷஷ்டிபூர்த்தி

மஹோத்ஸவக் கொண்டாட்ட விவரம்.

---

1. மஹாஜனக்கூட்டம்.

கன்னிமீ 6-உ சனிக்கிழமையன்று, அஜுர்க் கச்சேரியின் கீழ்பக்கமுள்ள மைதானத்தில் துரைத்தனத்தார் செலவில் கட்டப்படும் பெரிய பந்தலில், திருவிதாங்கோட்டு மஹாஜனப் பொதுக் கூட்டம் கூடும். திவான்பகதூர் கிருஷ்ணன் நாயரவர்கள் அக்கிராசனம் வகிப்பார்கள். ஸ்ரீமான்களான K. G. சேஷய்யரவர்களும், A. முத்துநாயகம் பிள்ளையவர்களும், இங்கிலீஷிலும், திவான்பகதூர் A. கோவிந்தப்பிள்ளையவர்களும், M. உதயவர்மராஜா அவர்களும் மலையாளத்திலும், K. N. குமரேசபிள்ளையவர்கள் தமிழிலும் பிரசங்கம் செய்வார்கள். கோட்டைக்ககம பெண் பள்ளிக்கூடம் பெண்களும, பெண்கள் கலாசாலைப் பெண்களும் பாடுவார்கள். இக்கொண்டாட்டத்திற் கென்றே பிரத்தியேகம் இயற்றப்பட்ட பாடல்கள் தமிழிலும், மலையாளத்திலும, இங்கிலீஷிலும் பாடப் படும.

2. தர்பார்.

9-உ செவ்வாய்க்கிழமை மாலை 4½-மணிக்கு தர்பார் ஹாலில் வைத்து, நமது மன்னர் பெருமானுக்கு, மங்களோபசாரப் பத்திரிகை யளிக்கப்படும். நமது கலாவித்தியாலயத்தில் (School of arts) செய்யப் பட்ட ஒரு அழகிய பெட்டியில் அப் பத்திரிகையை வைத்து, அரசர்பெருமானுக்கு ஸமர்ப்பணம் செய்யப்படும. திவான்பகதூர் கோவிந்தப் பிள்ளையவர்கள் மங்களோபசாரப் பத்திரிகையை வாசிப்பார்கள். திவான்பகதூர் S. பத்மநாபய்யரவர்கள் பெட்டியை அரசர் பெருமான் திருக்கரத்தளிப்பார்கள். ஸ்ரீமாந் முத்துநாயகம் பிள்ளையவர்கள் கையொப்பப் புத்தகத்தையளிப்பார்கள்.

3. அலங்காரமும் தீபக்காட்சியும்.

எல்லாக் கச்சேரிகளும் துரைத்தனத்தாரால் அலங்காரம் செய்யப்படும். பொருட்காட்சிச் சாலைத் தோட்டமும், அரண்மனைக்குத் தென் பக்கமுள்ள மைதானமும், கீழ்க்கோட்டைவாயில் முதல் கரமனை வரையுள்ள ரஸ்தாவும், ஷஷ்டிபூர்த்திக் கொண்டாட்டக்கம்மிற்றியாரால் தீபாலங்காரம் செய்யப்படும். கிழக்கோட்டைவாயிலின் முன் ஒரு நாற்கோணப்பந்தலும், அஜுர்க்கச்சேரி, கனகக்குன்றரண்மனை, இவைகளின் முன்னிலையில் இரண்டு இருக்கோண் பந்தல்களும் கம்மிற்றியார் செலவில் கட்டப்படும்.

4. விநோதங்கள்.

மன்னர்பெருமான் அரசாட்சிமகிமையை விளக்கி கலாசாலை மலையாள பண்டிதர் கேரளவர்ம தம்பிரான் அவர்கள் எழுதிய "ஓட்டந்துள்ளல்" பாட்டு, அஜுர் மைதானத்திலும் ஆண்டிப்பிறக்கத்திலும், மணக்காட்டிலும், தேவாரத்துக்கோயிற்கல் அரண்மனை முன்னும், அபிநயத்தோடு பாடப்படும். அஜுர்க்கச்சேரி மைதானத்தில் ஒரு கழைக்களிக்கூத்தும் ஆடப்படும். மிஸ்டர் தாலியோவின் தலைமையின்கீழ், பொய்முகம் கட்டியாடும் ஒரு விநோதக் கூட்டத்தார் பாளயத்திலிருந்து புறப்பட்டு பட்டணம் முழுதும், ஒரு மோட்டார் ரதத்தில் செல்வார்கள்.

பாடசாலை மாணுக்கர் பவனி.

பட்டணத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாணவர்களுக்கு ஒரு பலகாரவிருந்து நடக்கும். பின்னர் எல்லா மாணவரும அஜுர்க்கசசேரியில் வந்து கூடுவார்கள். 4 மணிக்கு அவ்விடமிருந்து பவனி புறப்படும். போகும்போது இந்த சந்தர்ப்பத்துக்காக எழுதப்பட்ட ஒரு 'வஞ்சிப்பாட்டு'ப்பாடிக்கொண்டே செல்வார்கள். இரவு வாணவேடிக்கை நடக்கும. வள்ளக்கடவிலும், பூஜைப்புரையிலும், கம்மிற்றியார் செலவில் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும். கதிக்குவெட்டு தினம் வழக்கமாய் நடக்கும் தி. வி. மஹாசபை இத்தடவை ஷஷ்டிபூர்த்திச் சிறப்பை விளக்கியே நடைபெறும்.

பத்திராதிபர்.

Trivandrum.

23rd August 1917.

To

The Editor,

Tamilian, Trivandrum.

Sir,

The following is an extract from letter No. *G. 5869 dated the* 2(th August 1917, received from the Dewan of Travancore.

"With reference to your letter No. 99 dated the 2nd August 1917, I have the honor to inform you that His Highness the Maharajah has been pleased to approve of the resolution 'that the Sastiabdapurthi permanent Memorial take the form of an Institute to develop the resources of the country, Industrial and Agricultural, (and) that, as the prime cause of our economic depression is the backward state of industries, the Institute's activity be primarily directed to the restoration and development of industries and commerce.' It should however be distinctly understood that the whole amount required for establishing and maintaining the Institute should be found by the people themselves.

I have etc.,

Sd/ M. Krishnan Nair,

Dewan.

Kindly publish the above in your paper.

M. Krishna Pillai,

Joint Secretary,

H. H. the Maharaja's Sastiabdapurthi

Celebration Central Committee.

MILTON'S LAST POEM.

This poem is almost unknown to the general reader. It describes in pathetic lines the complete self-surrender and resignation to the mercy of Providence of the poet in his blindness.

I am old and blind!
Men point at me as smitten by God's frown,
Afflicted and deserted of my mind,
Yet I am *not cast down.*

I am weak, yet, dying,
I murmur not that I no longer see;
Poor, old, and helpless, I the more belong,
Father, supreme, to Thee.

O Merciful One!
When men are farthest then Thou art most near;
When friends pass coldly by, my weakness shun
Thy chariot I hear.

Thy glorious face
Is leaning towards me, and its holy light
Shines in upon my lonely dwelling place,
And there is no more night.

On my bended knee
I recognize Thy purpose clearly shown:
My vision thou hast dimmed, that I may see
Thyself—*Thyself alone.*

I have naught to fear:
This darkness is the shadow of Thy wing,
Beneath it I am almost sacred, here
Can come no evil thing.

O! I seem to stand
Trembling, where foot of mortal never yet hath been
Wrapped in the radiance of thy sinless hand
Which eye hath never seen.

It's nothing now,
When Heaven is opening on my sightless eyes,
When airs from *Paradise* refresh my brow,
That earth in darkness lies.

(Culled from the "Ceylonese")

பூமி.

ஸ்ரீமாந் R. ஸ்ரீநிவாஸய்யரவர்கள் M. A. M. R. A. S.

II. அதன் சலனம்.

நமது உணர்ச்சிக்கு இப்பூமி சலனமற்றுநிற்க, மற்ற சகல நக்ஷத்திரங்களும் சூரிய சந்திரர்களும் அதைச் சுற்றுவதாகத்தோன்றின போதிலும் வாஸ்தவத்தில் அத்தோற்றம் தவறென்றும், பூமியின் சலனத்தினால்தான் அப்படிப்பட்ட தோற்றமேற்படுகிறதென்றும் சாஸ்திரக்ஞர்கள் சொல்லுகிறார்கள். தினமும் காலையில் சூரியன் கிழக்கில் உதித்து இப்பூமியை கிழக்குமேற்கு முகமாய்ச் சுற்றி சாயுங்காலம் மேற்கில் மறைகிறதாக நமது கண்களிற் காணப்படுகின்றது. அநேக நக்ஷத்திரங்களும் அங்ஙனமே சுற்றுவதாக நமது கண்களுக்குத் தோற்றுகின்றன. ஆனால் நமது ஐம்பொறிகளைக்கொண்டு உண்மையை நிர்ணயஞ்செய்ய நமக்கு யோக்யதையில்லை. புத்தியை உபயோகப்படுத்தித்தான், உண்மையைக் கிரஹிக்க வேண்டியிருக்கிறது. நாம் ஒரு இடத்தில் நின்றுகொண்டு நோக்குங்கால் சமீபத்திலிருக்கும் வஸ்துக்கள் பெரிதாகவும் தூரத்திலுள்ளவை சிறியதாகவும் நமது கண்களுக்குத் தோன்றுகின்றன. கண்ணைமட்டும் நம்புவோமானால் எட்டியிருப்பது ஒரு மலையாயினும் அது அருகிலிருக்கும் ஒரு மரத்தைக்காட்டிலும் சிறியது என்று சொல்லக்கூடும். ஆனாலது சரியல்லவென்று நமது புத்திகூறுகின்றது, ஆகையால் நமது கண்களுக்கு நாம் ஆகாயத்தில் காணும் நக்ஷத்திரம் முதலியவைகள் நம்மைச் சுற்றுவதாய்த் தோன்றுவதால் மாத்திரம் அத்தோற்றம் சரியென்று கூறமுடியாது.

இத்தோற்றம் இரண்டுவித காரணங்களாலேற்படலாம். பூமி நிச்சலமாயிருந்து மற்ற ஆகாய சஞ்சாரிகள் (Heavenly bodies) அதைச் சுற்றி வருவதாக நினைக்கலாம்; நமது கண்களும் அவ்விதமே கூறுகின்றன. அல்லது ஆகாயத்தில் உள்ள நக்ஷத்திரங்கள் சலனமில்லாமல் நிற்க பூமி தன்னைச் சுற்றிவருவதாகவும் எண்ணலாம். இக்காரணத்தாலும் அத்தோற்றமேற்படலாம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. நாம் வேகமாய் ஜலத்தில் படகில் போகும்போது பக்கத்துக்கரைகள் நகருகிறதாகத் தோன்றுகின்றன, உண்மையிலோ நாம் நகருகிறோம். அதேமாதிரி நாம் புகைவண்டியில் போகும்போதும் நாம் சலனமில்லாமல் நிற்க, பக்கத்திலுள்ளவைகள் ஓடுகிறதாகத் தோன்றுகின்றன. ஆனால் வெளியில் நின்று பார்ப்பவர்களுக்குப் புகைவண்டிதானோடுகிறதென்று தெரியும். அதே மாதிரி இப்பூமி தன்னைச்சுற்றி வந்தால் நமக்கு அதிலுள்ள மற்ற நக்ஷத்திரங்கள் நம்மை சுற்றுவதாய்த்தான் தோன்றும். நாம் பூமியிலேயே வசிப்பதால் அது சுற்றுவது நமது கண்களிற்படாது.

இவ்விரண்டு அபிப்பிராயங்களுள் எது உண்மையாயிருக்கக்கூடும்? பூமிதான் தன்னைச் சுற்றுகிறது என்று அனுமானிக்க அநேக காரணங்களுண்டு. 1. பூகோள சாஸ்திரக்ஞர்கள் நாம் வசிக்கும் பூமியானது ஆகாயத்தில் சஞ்சரிக்கும் நக்ஷத்திரங்கள், சூரியன், இன்னுமநேக கிரஹங்கள், இவைகளைக் காட்டிலும் மிகவும் சிறியதாயிருப்பதாகச்சொல்லுகிறார்கள். ஒவ்வொரு நக்ஷத்திரமும அநேக கிரஹங்களையுடைய ஒரு சூரிய மண்டலமென்றும் நாமறிகிறோம். நமது பூமியிலிருந்து நக்ஷத்திரங்களின் தூரமோ கணக்கிடமாளாததாக இருக்கிறது. இப்படிப்பட்ட அநேக நக்ஷத்திரக்கூட்டங்கள் எல்லாம் சுமார் 24-மணி நேரத்தில் நம்மைச்சுற்றி, திரும்பவும் தாங்கள் புறப்பட்ட இடங்களுக்கு வருகின்றனவென்று நினைப்பதைக்காட்டிலும் அவைகள் ஸ்திரமாகவே நிற்கின்றன, ஆனாலிப்பூமி மட்டும் தன்னைச்சுற்றி வருகிறது என்று நினைப்பது நமது புத்திக்கு ஒப்புக்கொள்ளத் தக்க விஷயமாகத் தோன்றவில்லையா?

மேலும் நாம் ஆகாயத்தில் காணும் சஞ்சாரிகள் எல்லாம் நம்மிடத்திலிருந்து ஒரே தூரத்திலில்லை; சில கிரஹங்கள் கிட்ட நிற்கின்றன; சில நக்ஷத்திரங்கள் கணக்கிட முடியாத தூரங்களிலிருக்கின்றன. இப்படி பற்பல தூரங்களில் நிற்கும் ஆகாய சஞ்சாரிகளெல்லாம் ஒரே மாதிரியாக நம்மைச்சுற்றி ஒரே சாவகாசத்திற்குள் தாங்கள் புறப்பட்ட இடங்களையடைய வேண்டுமானால், அதற்குத் தகுந்தபடி ஒவ்வொரு நக்ஷத்திரத்திற்கும் வெவ்வேறு வேகமும் சக்தியும் வேண்டும். நக்ஷத்திரங்களோ ஆயிரக்கணக்கானவைகள். இவைகளொவ்வொன்றிற்கும் தகுந்தபடி வேகத்தை சரிப்படுத்திக் கொண்டிருப்பதைவிட இவைகளை நிச்சலமாய் நிறுத்தி நமது பூமியான ஒரு சிறிய கிரஹத்தைத் தன்னைச்சுற்றும்படி செய்தல்

நாம் அங்கீகாரம் பண்ணிக் கொள்ளும்படியானதாய்த் தோன்றுகிறது. 3. இப்பிரபஞ்சத்திலுள்ள மற்ற சூரியன் சந்திரன்முதலான கிரஹங்களைக்கவனித்தால் அவைகளையெல்லாம் தம்மையே சுற்றுவதாகத் தெரிய வருகிறது. அவைகளெல்லாம் சுற்றும் போது நமது பூமிமட்டும் ஏன் சுற்றாமலிருக்கவேண்டும்? ஆனலிது வரையில் நாம் சொன்ன விஷயங்கள் அனுமானங்களேயல்லாமல் சரியான ருஜுக்களல்ல. சில ருஜுக்களுமிருக்கின்றன. அவைகளை நாம் நன்கறிந்துணர வேண்டுமானல் சலன சக்தி சாஸ்திர (Dynamics) த்தில் பாண்டித்யம் பெறவேண்டும். ஆகிலும் ஒரு ருஜு யாவரெல்லாருமறியத் தக்கதென்று தோன்றுகிறது; அதைக் கவனிப்போம்.

பூமி உருண்டை வடிவமுள்ளதென்று ஸ்தாபித்தோமல்லவா? உருண்டையாயிருந்து தன்னைச்சுற்றும் பக்ஷத்தில் ஒரு மலையின் உச்சி அதனடிவாரத்தைக்காட்டிலும் அதிக வேகத்துடன் சுற்றவேண்டும். பக்கத்திலிருக்கும் படத்தைப் பார்த்தால் இது நன்கு விளங்கும். சக ஒரு மலை யென்று வைத்துக்கொள்வோம். பூமி தன்னைச்சுற்றி ஒரு கடிகாரத்தின் முட்கள் சுற்றுகிற மாதிரி (ↄ) சுற்றுவதாக வைத்துக் கொள்வோம். அப்படியானல், பூமி ஒருதடவை தன்னைச்சுற்றுவதில் க செல்லும் வட்டத்தின் நீளம் ச செல்லும் வட்டத்தின் நீளத்தைக்காட்டிலும் அதிகமானது. ஒரே சாவகாசத்தில் க அதிக தூரம் போகிறபடியால் அதின் வேகம் ச வின் வேகத்தைவிட அதிகமாயிருக்கவேண்டும். பூமிக்கு மேலிருந்து ஒரு கல்லை நழுவவிட்டால் பூமியின் தரையை வந்தடைகிறதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அது எதனலென்றல் பூமிக்குத் தன்னருகில் வருகிற எல்லாப்பதார்த்தங்களையும் தன் மத்தியத்திற்கு (centra) இழுத்துக் கொள்கிற சக்தியுண்டு. இப்போது நாம் க விலிருந்து ஒரு கல்லை நழுவவிட்டால், பூமி சுற்றாமல் சலனமற்றிருக்கும் பக்ஷத்தில் அக்கல் ச என்கிற இடத்தில் தரையை வந்தடையும். ஆனல் பூமி சுற்றுவதாயிருக்குமானல் க, ச இவ்விரண்டிடங்களும் நகர்ந்துகொண்டிருக்கின்றன; மேலும் க, ச வை விட அதிக வேகத்துடன் செல்லுகிறது. கல் தரையை வந்தடைவதற்குள் ச ட வென்கிற இடத்திற்கு வருகிறதாக வைத்துக்கொள்வோம்; அப்படியானல் க த வென்ற இடத்தையடையும். கல்லிற்கு க வின் வேகமிருக்கிறபடியால் அது தரையை வந்தடையும். ப வென்ற இடம் ட வைவிட தூரத்திலிருக்கும். ச ப வின் தூரம் கிட்டத்தட்ட க த வின் தூரத்திற்கு சமமாயிருக்கும். வாஸ்தவத்தில் அனேக சாஸ்திரக்ஞர்கள் செய்த ஆராய்ச்சிகளில் இவ்விதம் நடைபெறுகிறதாகத் தெரியவருகிறது. ஆகையால் பூமி தன்னைச் சுற்றிவருகிறதென்று தீர்மானிக்கலாம்.





மேலும் மற்றொரு காரணமுண்டு; நமது பூமியின் வடக்குப் பாதியில் வடகிழக்கிலிருந்து வீசப்பட்ட காற்றும் (North-east Trade-winds, தெற்குப் பாதியில் தென்மேற்கு திசையிலிருந்து வீசும காற்றும் பூமிதன்னைச் சுற்றுவதால்தானேற்படுகிறது. நம்மைச் சுற்றி நிற்கும் காற்று உஷ்ணப்பட்டால் இலேசாகி மேலே கிளம்புகிறதென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம். பூமியின் மத்தியபாகத்திலுள்ள பிரதேசங்கள் வடக்கேயும் தெற்கேயுமுள்ள பிரதேசங்களைக் காட்டிலும் சூரியனுடைய கிரணங்களால் அதிகமாக உஷ்ணப்படுத்தப் படுகிறதென்பதும் தெரிந்த விஷயமே. ஆகையால் மத்தியபாகத்திலுள்ள காற்று மேலே கிளம்ப வடக்கு தெற்கு பாகங்களிலிருந்து உஷ்ணம் குறைவுள்ள காற்று அந்த இடத்தை நாடி வீசுகிறது. பூமியைச் சுற்றிலுமுள்ள மத்திய பாகத்திலெல்லாம் இவ்வித சம்பவம் நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. பூமி சுற்றாமல் நிற்கும் பக்ஷத்தில் வடக்குப்பாகத்தில் வடக்குத்திசையிலிருந்து தெற்கு முகமாகவும் காற்று வீசவேண்டும். அப்படியில்லாமல் வடகிழக்கிலிருந்தும் தென் மேற்கிலிருந்தும் வீசுவானேன்? அது பூமி தன்னைச் சுற்றுவதாற்றன். பூமி ப ம என்கிற கோட்டைச் சுற்றிவருகிறதாக வைத்துக்கொள்வோம். மத்திய பாகத்திலுள்ளவேகம்மற்றப்பாகங்களிலுள்ளதைக்காட்டிலும் அதிக மானது. க என்கிற இடத்திலிருந்து காற்று புறப்பட்டால் பூமி நிச்சலனமாயிருக்கும் பக்ஷத்தில் நேரே தெற்காக ல என்கிற இடத்தை நோக்கி வரும்; பூமி சுற்றுவதாயிருந்தால் ல என்கிற பாகத்தின் வேகம் க-



வின் வேகத்தை யதிகரித்திருப்பதால் ல விற்கு மேற்கிலுள்ள ர என்கிற ஒரு இடத்தில்தான் மத்யபாகத்தையடையும் அக்காற்று. காற்று நேர் தெற்காகத்தான் வருகிறது; ஆனால் ல என்கிற பாகத்தின் வேகமதிகமாயிருப்பதால் அக்காற்று பூமியின் மத்தியபாகத்தையடைவதற்குள் ல அதிகம் கிழக்கேபோய்விடும். ஆகையால் பூமியிலிருந்து பார்க்கும் நமக்கு அக்காற்று தென்மேற்கை நோக்கிச் செல்வதாய்த்தோன்றும். இதெப்படி என்று இலேசில் எல்லாருமறியலாம். நாம் வண்டியிலேறி கிழக்குமுகமாகப் போவோமானால் நேராகக் கீழே பெய்யும் மழைத்துளிகள் மேற்குப் பக்கம் சாய்ந்து விழுகிறதுபோல் தோன்றும். நாம் மழையில் குடைபிடித்துக்கொண்டு போவதாயிருந்தால் மழை சாய்ந்தடிக்காமல் நேராகப் பெய்வதாயிருந்தாலும் முன்னே குடையைச் சாய்த்துக் கொள்ளுகிறோமல்லவா? ஏன்? மழை நமது பக்கம் சாய்ந்து அடிக்கிறதாகத் தோன்றுகிறது. அது நம்முடைய சலனத்தினாற்றான். அது போலவே க வை விட ல வின் வேகமதிகமானபடியால் பூமியின்மீதிருப்பவர்களுக்கு காற்று தென்மேற்குத் திசை நோக்கி வீசுவதாய்த் தோன்றும். நமது அனுபவத்திலுமிப்படியேதானிருக்கிறது.' ஆகையால் பூமி தன்னைச்சுற்றி வருகிறதென்றுதான் ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது.

[தொடரும்]

R. Srinivasan M. A.

சந்திரகுப்த சக்கரவர்த்தி சரித்திரம்,

(88-வது பக்கத் தொடர்ச்சி.)

அலெக்ஸாந்தர் நம் நாட்டில் புயல் காற்றுப் போல வந்தான். புயல் காற்றுப்போலவே திரும்பியும் போய் விட்டான். ஜன்ம நாட்டிலிருந்துகிழக்கே 4000 மைல் வரையில் உற்சாகத்துடன் அவனைத்தொடர்ந்து வந்த வீரர்கள் கடைசியாக இனிமேல் மேலே ஒரு அடி கூட எடுத்துவைக்கமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். அலெக்ஸாந்தர் நல்வார்த்தை சொல்லிப் பார்த்தான். பயமுறுத்திப் பார்த்தான். எதற்கும் அவர்கள் மசியவில்லை. வெறும் சிற்றரசனான புரூரவாவே தாங்கற்கரிய போர் கொடுத்து, தங்களால் அரிதில், அகஸ்மாத்தாய்த் தான வெல்லப் பட்டிருக்கும் பொழுது தாங்கள் ஆரியாவர்த்தத்தின் சக்கரவர்த்தியினுடைய சைனியத்தோடு போர்புரிந்து தப்புவது அசாத்தியம் என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள்.¶

ஆகையால் அலெக்ஸாந்தருக்குத் தன் ஊர்நோக்கித்திரும்புவதைவிட வேறு வழியில்லாதாகிவிட்டது. விபாஸா நதிக்கு அக்கரையில் பெரிய ஜயமேடைகள் கட்டிவிட்டு அவன் ச. மு. 403 (கி. பி. 326)—இல் தன் நாடுநோக்கித் திரும்பிவிட்டான்.

ஆரியாவர்த்தத்தை விட்டு நீங்கின 3 வருஷத்துக்கெல்லாம், அதாவது ச. மு. 400 (கி. பி. 323)—இல் அலெக்ஸாந்தர் இறந்துபோய் விட்டான். சந்திரகுப்தனுக்கு அப்பொழுது சுமார் 25 வயதிருக்கலாம். அலெக்ஸாந்தரை விட்டுப் பிரிந்த நாள்முதற்கொண்டே அவன் படைசேர்க்க ஆரம்பித்து விட்டான். அலெக்ஸாந்தர் இறந்த செய்தி எட்டியதும், பாஞ்சாலத்தைத் (பஞ்சாபை) தன் அதிகாரத்தில் நிலைநிறுத்திவைப்பதற்காக அவன் நிறுத்திவிட்டுப்போன கிரேக்கப்படைகளைச் சந்திரகுப்தன் முறியடித்து அந்த மாகாணத்தைத் தன் வசமாக்கிக்கொண்டான். அலெக்ஸாந்தரோடு போர்புரிந்த புரூரவாவானவன் சந்திரகுப்தனுக்குப் போர்கொடுக்காமலே வணங்கிவிட்டதிலிருந்து, அவன் சந்திரகுப்தனுக்கு மகத ராஜ்யத்தின் மீதிருந்த உரிமைப்பாத்தியத்தை ஒப்புக்கொண்டானென்று ஏற்படுகிறது.

சக்கரவர்த்தியின் அசிரத்தையாலோ ஆற்றலின்மையாலோ மிலேச்சர் வசம் போய்விட்ட ஒரு பெரிய மாகாணத்தைச் சந்திரகுப்தன் மீட்டுவிட்டான் என

¶அடிக்குறிப்பு:—“போருஸ்ஸோடு (அதாவது, புரூரவாவோடு) செய்த போர் மகேதோனியரின் உற்சாகத்தை அவித்துவிட்டது. இந்தியாவில் இன்னும் கிழக்கே செல்லக்கூடாது என்று அவர்களை நினைக்கச் செய்துவிட்டது. 20000 ஆட்களும், 2000 குதிரைப் படையும் மாத்திரம் வைத்துக்கொண்டு போர்செய்த சத்துருவை வென்றதே மிகப்பாடாயிருந்தது. ஆகையால் 32 பர்லாங்கு அகலமும் 100 பாகம் ஆழமுமுள்ள கங்கையைக் கடந்து செல்லவேண்டுமென்று அலெக்ஸாந்தர் வற்புறுத்தியபோது அவர்கள் ஒரே பிடிவாதமாய் மாட்டோம் என்று சொல்லி விட்டார்கள்.” புளூதார்க்கு.

வே அவனுடைய துவசத்தின் கீழ் நின்று போர் புரியக் கணக்கில்லாத வீரர் சேரத்தலைப்பட்டார்கள். நாளுக்குநாள் வளரும் சேனையுடன் அவன் பாடலிபுரம் நோக்கிப்புறப்பட்டான். தனநந்தன் மீதுள்ள அருவருப்பினாலும், சந்திரகுப்தன் தான் ராஜ்ஜியத்துக்கு உரிமையாளன் என்று கண்டதினாலும், போகும் வழியெல்லாம் ஜனங்கள் அவனைத் தங்களைக் காக்க வந்த ரக்ஷகனாகவே நினைத்து அவனுக்கு ஸமஸ்தோபசாரமும் செய்து வரவேற்றார்கள்.

சந்திரகுப்தன் மகதநாடு சென்றான். தனனோடு போர்புரிந்தான். தனன் தோற்றுப் போய்விட்டான். அவனையும் அவனுடைய குடும்பத்தையும் பிடித்து, ராஜத்துரோகத்துக்காகவும் குடிகளை வருத்தியதற்காகவும், அவர்களுக்கு மரணதண்டனை விதித்துவிட்டு, சந்திரகுப்தன் பாடலீபுரத்துச் சிங்காசனத்தின்மீது ஏறி அரசாள ஆரம்பித்தான்.

இந்தப் பெரிய காரியங்கள் செய்வதற்குச் சந்திரகுப்தனுக்கு உற்ற துணைவனாகவும் மந்திரியாகவும் இருந்தவன் விஷ்ணுசர்மன் என்றும் கௌடில்யன் என்றும், சாணக்கியன் என்றும், பல பெயர்களையுடைய ஒரு பிராம்ஹணனே. அவன் எந்த நாட்டான் என்று நிச்சயிக்கப்போதுமான ஆதாரங்களில்லை. அவன் காஷ்மீரத்தான் என்று சொல்லுவது ஒரு கர்ண பரம்பரை. ஆனால் அவனுக்கு திரமிளன் என்ற ஒரு மறுபெயர் இருப்பதினின்றும், தமிழ்நாட்டில் வழங்கும், சோழியன் குடுமி சும்மா ஆடாது, என்கிற பழமொழி அவனைப்பற்றித்தான் முதல் முதல் பிறந்தது என்ற கர்ண பரம்பரை இருப்பதினின்றும், அவன் ஜன்ம பூமி தமிழ் நாடான சோழ நாடாக இருந்திருக்கலாம் என்று நினைக்கவும் நியாயம் இருக்கிறது. ஆனால் அவன் எந்த நாட்டானாக இருந்தபோதிலும் பஞ்சாப்பில் தக்ஷசீலம் என்னும் நகரிலுள்ள சம்ஸ்கிருத சருவ கலாசாலையில் கல்விகற்று, அக்காலத்திலுள்ள சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்து, அவன் மகா பண்டிதனாக விளங்கினான் என்று தெரிகிறது. அவனுக்கும சந்திரகுப்தனுக்கும் நட்பு எவ்விதம் ஏற்பட்டது என்று கூறும் ஒரு கதை உண்டு. சந்திரகுப்தன் சுதேச பகிஷ்கிருதனாய் ஊர் ஊராய்த் திரிந்துகொண்டிருந்த காலத்தில் ஏதோ ஒரு ஊரில் சாணக்கியனைப் பாட்டையில் எதிருச்சையாய்ச் சந்தித்தான். நடந்து சென்றுகொண்டு போகையில் சாணக்கியன் காலில் ஒரு புல் இடறிற்று. உடனே அவன் திரும்பி அந்தப் புல்லைக் கிள்ளியெறிந்ததல்லாமல் அதன் வேரையும் கெல்லியெடுத்து, அது இருந்த இடத்தில் ஆழமாகப்பறித்துப் பார்த்து, ஒரு துணுக்குச் சல்லிவேர்கூட இலலாமல் செய்து குழியைப் மூடிவிட்டுப் பிறகு மேல் நடந்தான். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சந்திரகுப்தன் ஆச்சரியப்பட்டு அவனை நெருங்கி, நீ என்ன இவ்விதம் செய்தாய்? என்று கேட்டான். அதற்கு அவன், உன்னைப் பார்க்கும்போது நீ ராஜலக்ஷணம் பரிபூர்ணமாய் நிரம்பியவனென்றும், தற்காலம் சத்துருக்களுக்கு அஞ்சி ஓடிவந்திருக்கிறவனென்றும் எனக்குத் தோன்றியதால், சத்துருக்களை வேர்கூட இல்லாமல் களைந்து விடுவதுதான் ராஜதர்மம் என்று உனக்குக் காட்டுவதற்காகத் தான் நான் அவ்விதம் செய்தேன், என்றான். சந்திரகுப்தன் உடனே சந்தோஷப்பட்டு, தான் கொண்ட பெரும் நோக்கத்தை நன்மந்திரியாக இருந்து நிறைவேற்றிக் கொடுக்க அவன் தான் தகுந்தவன் என்று தீர்மானித்து அவனைத் தன்னுடைய பிரிய நண்பனாக்கிக் கொண்டான்.

சிங்காதனம் ஏறியதும் சந்திரகுப்தன், நெடுநாளையக் கொடுங்கோன்மையினாலும் அஜாக்கிரதையினாலும் சீர்குலைந்துபோன ராஜ்ஜிய நிர்வாக யந்திரத்தைப் புதுப்பித்து, ஒழுங்கு படுத்தி, ஆரியாவர்த்தத்தின் கௌரவத்துக்கும் கீர்த்திக்கும் ஏற்றவாறு அதைச்சீர் செய்து அமைக்கும் பாரத்தை சாணக்கியனிடம் ஒப்புவித்தான். அந்தப் பொருள் நூல் புலவன் செய்த ஏற்பாடுகளைப் பின்வரும் பக்கங்களில் கூடிய மட்டில் விஸ்தரித்துச் சொல்லுவோம். ஆனால் இங்கு தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமென்னவென்றால், சாணக்கியன் ஆரியாவர்த்தத்தை அக்காலத்தில் உலகத்திலுள்ள ராஜ்ஜியங்கள் அனைத்தினும் சர்வவிதத்திலும் முதலானதாகச் செய்து விட்டான் என்பதே. சந்திரகுப்தனுடைய ஏகாதிபத்தியமானது, மேற்கே ஸிந்து நதி, அராபிக்கடல், இவை முதற்கொண்டு கிழக்கே வங்காளக்கடல் பரியந்தமும், வடக்கே இமயமலை முதற்கொண்டு தெற்கே குறைந்தது விந்தியமலை பரியந்தமும் பரவியிருந்தது. விந்தியமலைக்குத் தெற்கேயும் தமிழ் நாட்டுக்கு வடக்கேயுமுள்ள பிரதேசத்தை சந்திரகுப்தனே ஜயித்தானா அல்லது அவன் மகனான பிந்துசாரன் தான் வென்றானா என்று நிர்ணயிக்கப் போதுமான சாக்ஷியங்கள் இல்லை. ஏகாதிபத்தியத்தின் சைனியத்தின் தொகை 30,000 குதிரைப் படை

யும், 6,000 யானைகளும், 6 லக்ஷம் காலாட்படையும், எண்ணிறந்த ரதங்களும் ஆகும். சேனையின் பலத்தாலும், ராஜ்ஜியாதிகாரமுறைமையின் நியாயப்போக்காலும், ராஜ்ஜியத்தை நிர்வகிக்கும் தந்திரத்தாலும், ஏகாதிபத்தியதுக்கு உட்பகையாவது வெளிப்பகையாவது இல்லாமலிருக்கும்படி சந்திரகுப்தன் ராஜ்ஜியபாரம் செலுத்திவந்தான்.

இதன் மத்தியில் அலெக்ஸாந்தர் இறந்தபிறகு அவனுடைய ஏகாதிபத்தியம் சின்னபின்னமாய் விட்டது. அவனுடைய சேனாநாயகர்களுக்குள் ஒவ்வொருவனுக்கும் தான் ஒருவனே அவன் வென்ற ராஜ்ஜியங்களனைத்தையும் கவரவேண்டுமென்கிற எண்ணமிருந்ததால், அவர்களுக்குள் 1, 12 வருஷங்களுக்கு அகோரயுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஸெலியுக்கன் என்பவன், முதலில் முறியடிக்கப்பட்டு தேசாந்திரி போலத்திரிய வேண்டி வந்தும், கடைசியாக யூப்ஹராடீஸ் நதி முதல் ஸிந்து நதி வரையிலுமுள்ள பிரதேசங்களைத் தன புஜவலியாலும், சாமர்த்தியத்தாலும் வென்று, கொற்றன் (கிரேக்கில், நிகாதோர்) என்று பட்டப் பெயர் பூண்டு அரசாட்சி புரிந்து வந்தான். அவன் அலெக்ஸாந்தர் திரும்பிவிட்ட பிறகு கிரேக்கர் கைவசமிருந்து நழுவிவிட்ட பாஞ்சாலத்தை (பஞ்சாபை) மறுபடி வெல்ல வேண்டுமென்றும், கூடுமானால் அலெக்ஸாந்தராலும் வெல்லப்படாத ஆரியாவர்த்தத்தின் இதர பாகங்களையும் கவரவேண்டுமென்றும் எண்ணங்கொண்டு ச. மு. 383 (கி. பி. 305) இல் ஒரு பெரிய சேனையோடு ஸிந்து நதியைக் கடந்தான். ஆனால் கொற்றனுடைய ஜயம் சந்திரகுப்தனிடம் செல்லவில்லை. கிரேக்கனுடைய சைனியம் ஆரியனுடைய சைனியத்துக்கு முன் நிற்க முடியாமல் புறங்காட்டி ஓடிவிட்டது. ஸெலியுக்கன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு சந்திரகுப்தனைச் சமாதானமாகப்போக வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சந்திரகுப்தனும் சம்மதித்தான். சந்திரகுப்தன் நிருமித்தபடி, ஆரியாவர்த்தத்திற்கு மேற்கேயுள்ள, தற்காலத்தில் ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் என்று வழங்குகிறதும் அக்காலத்தில் ஆரியானென்று வழங்கியதுமான, நாட்டை ஸெலியுக்கன் சந்திரகுப்தன் வசம் விட்டுவிடவேண்டியதென்றும், அவனுடைய குமாரத்தியை சந்திரகுப்தன் மணக்கிறதென்றும், சந்திரகுப்தன் ஸெலியுக்கனுக்குப் பரிசாக 500 யானைகள் கொடுக்கிறதென்றும், பாடலீபுர அரசவைக்கு ஸெலியுக்கன் ஒரு தூதனை அனுப்பிவைக்க வேண்டியதென்றும், இரண்டு அரசர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் நடந்தது. அதன் பிரகாரமே சந்திரகுப்தனும் ஸெலியுக்கனுடைய பெண்ணை விவாகம் செய்து கொண்டான். மெகாஸ்தனன் என்னும் கிரேக்கனும் ஸெலியுக்கனுடைய தூதனாக ஆரியாவர்த்தத்திற்கு வந்தான்.

கிரேக்கருக்கும் ஆரியருக்கும் நடந்த போர் இவ்வாறு முடிந்தது. ஆரியானைப் போன்ற ஒரு பெரிய நாட்டைக் கொடுத்தாவது சமாதானம் செய்து கொண்டுவிட வேண்டுமென்று ஸெலியுக்கன் நினைத்ததற்குக் காரணம் அவன் போரில் சந்திரகுப்தனால் நன்றாகப்புடைக்கப்பட்டதாகத்தான் இருக்கவேண்டுமேயொழிய வேறேதாகவுமிருக்க நியாயமில்லை. அலெக்ஸாந்தரின் யுத்தங்களில் போர் நுணுக்கங்களையெல்லாம் கற்றவனும் தான் பெற்ற வெற்றிகள் காரணமாகக் கொற்றன் என்ற பட்டப்பெயரும் பெற்றவனுமான ஸெலியுக்கனைச் சந்திரகுப்தன் ஒரு போரிலே அடக்கி அவனுடைய ஊக்கத்தையும் அழித்துவிட்டான் என்னும்போது அவனுடைய வல்லமை ஒருவாறு விளங்கும்.*

ஆனால் நமது சக்கரவர்த்தி கேவலம் போர் வீரன் மாத்திரம் இல்லை. அவன் குடியோம்பலில் சம்பாதித்த புகழானது அவன் போர் செய்து வென்ற புகழைக்காட்டிலும் கூடப் பெரிதாயிருக்கிறது. பெரிய மகாராஜாக்களுக்குத் திறமையும் வாய்மையும் சான்றாண்மையும் நிறைந்த அமைச்சர் அமைவது இயற்கை. அப்படியே சந்திரகுப்தனும் தன் அமாத்திய சபைக்குப் பெருந்த அறிவாளிகளையும் தந்திர சாஸ்திர நிபுணர்களையும் ஜனங்களிடத்தில் அபிமானமுடையவர்களையும் பிரதானிகளாகத் தேர்ந்தெடுத்து, மனிதருடைய உள்ளத்தைக்கண்டறிவதில் தனக்குள்ள சாமர்த்தியத்தையும் தன் பிரஜைகளினிடத்துத்

* [அடிக்குறிப்பு] 'சந்திரகுப்தனிடம் தோற்றுப்போன பிறகு ஸெலியுக்கனானவன் மேற்கே சுமார் 3000 மைல் சென்று அலெக்ஸாந்தரின் இன்னொரு சேனாநாயகனாக இருந்தவனும், தன்னைப் பலதடவைகளில் முறியடித்துவிட்டிருந்த பகைவனுமான ஆந்திகோனன் என்னும் அரசனை வென்று அவனது ராஜ்ஜியத்தையும் கட்டிக்கொண்டானாகையால், அவன் சாமானிய வீரன் அல்ல என்றும், சந்திரகுப்தனோடு போர்செய்த காலத்தில் திறமை குன்றிப்போய்விட்டவனும் அல்ல என்றும் ஏற்படும்,

தனக்குள்ள அன்பையும் காட்டினான். இந்த அமாத்திய சபைக்கு நடுநாயகமாக விளங்கியவன நாம் ஏற்கனவே பிரஸ்தாபித்திருக்கும சாணக்கியனே. அவன் தன் நயசாஸ்திரத் திறமை அனைத்தையும் தன் அரசன் என்ன தன் நாட்டார் என்ன இவர்களது க்ஷேமத்தின் பொருட்டே வஞ்சனையின்றிப் பிரயோகித்து வந்தான். சக்கிரவர்த்தியும் அவனுடைய ராஜ்யதந்திர நைபுண்ணியத்தைக் காட்டுவதற்கு அவனுக்குச் சகலவிதத்தாலும் இடம் கொடுத்தான். ஆகவே இவ்விருவருடைய பெருமுயற்சியாலும் இதரப்பிரதானிகளுடைய உதவியினாலும் நமது ஆரியாவர்த்தத்தில் ஒரு வலிபொருந்திய, ஆனால் அதே காலத்தில் ஜனங்களின் க்ஷேமத்தைப் பிரதான நோக்கமாகக் கொண்ட, ராஜ்ஜியாதிகாரம் நிலைநிறுத்தப்பட்டு நடைபெற்று வந்தது.

அரசை நடத்தவேண்டிய மார்க்கம் இது என்று சவிஸ்தாரமாகக் காட்டி சாணக்கியன் ஒரு நூல் எழுதியிருக்கிறான். அதன் பெயர் அர்த்த சாஸ்திரம், அதாவது பொருள் நூல் என்பது, அந்த நூல இந்த நாள் வரையில் நம் நாட்டில் கற்கப்பட்டு வந்திருக்கிறது. அவன் அபிப்ராயங்களனைத்தையும் காரியலோகத்தில் நடத்திக்காட்ட சாணக்கியனுக்குச் சக்கரவர்த்தி சர்வாதிகாரியங்களையும் கொடுத்திருந்தமையால், சக்கராதிபத்தியத்தின் நிருவாக காரியமெல்லாம் ஏறத்தாழ அந்த அர்த்தசாஸ்திரத்தில் வருணித்திருக்கிறபிரகாரமே நடைபெற்று வந்தது என்று சொல்லுவது பொருந்தும். தவிர ஸெலியுக்கனுடைய தூதனை மெகாஸ்தனன் என்பவன், தான் ஆரியாவர்த்தத்தில் கண்ட கேட்ட விஷயங்களை யெல்லாம் கிரேக் பாஷையில் குறித்து வைத்து ஒரு நூல் எழுதியிருக்கிறான. அதில் சிலபகுதிகள் இக்காலம் வரை எஞ்சி நிற்கின்றன. அவைகளில் காணும் விவரங்கள் அர்த்தசாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் விவரங்களோடு பொருந்தக்கூடிய விஷயங்கள் அனைத்திலும் பொருந்தியே இருப்பதினால் நமமுடைய மேற்கூறிய வாதம் வலிபெறுகிறது. இந்த இரண்டு நூல்களின் உதவியைக்கொண்டு சரித்திர நூலாசிரியர்கள் சந்திரகுப்தனுடைய அரசியல் இவ்வாறிருந்தது என்று ஒரு மட்டுக்குத் துணிந்திருக்கிறார்கள். அதைச் சுருக்கமாகவருணிப்போம்.

ஏகசக்கராதிபத்தியத்தின் ராஜதானி பாடலீபுத்திர நகரம் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். அதிலிருந்து ராஜபாட்டைகள் மேற்கும், கிழக்கும், தெற்கும் வடக்குமாகச் சக்கராதிபத்தியத்தின் எல்லைகள் வரையிலும் சென்றன. அவை வியாபாரப் போக்குவரத்துக்காகவும், ஜனங்களின் தீர்த்தயாத்திராதி பிரயாண வசதிக்காகவும், ராஜ்ஜியத்தைக் காப்பதற்காகச் சைனியங்களை அதிவேகமாக ஒரு இடத்தினின்றும், மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோவதற்காகவும் உபயோகமாகுமாறு அகலமாயும், கெட்டியாயும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அந்த ரஸ்தாக்களின் அகலம் பெரும்பாலும் 4 தண்டம், அதாவது 32 அடியாக இருந்தது. சிற்சில இடங்களில் அவை 8 தண்டம் அகலமும் அகன்றிருந்தன. பாட்டைகளின் இரண்டு சாரிகையிலும் பிரயாணிகளுக்கும் கால்நடைகளுக்கும் நிழல் தருமாறு பெரிய பெரிய மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. ரஸ்தா நெடுகலும் அரைக்குரோசத்துக்கு* ஒரு கல் வீதம் கற்கள் நட்டு, ராஜதானியிலிருந்து எத்தனை தூரம் என்று காட்டுவதற்கு அந்தக் கற்களில் எண்களும் வெட்டப்பட்டிருந்தன. பெரியரஸ்தாக்களிலிருந்து கிளை ரஸ்தாக்களும், அவைகளினின்று இன்னும் சிறு பாதைகளும் பிரிந்து, ராஜதானியோடு கடைசித் தரமான கிராமங்களையும்கூட இணைத்து விட்டிருந்தன. ஆனால் போக்குவரத்து சௌகரியங்களுக்காக ரஸ்தாக்கள் மாத்திரம் தான் என்பதில்லை. ராஜாங்கமானது நதிகளில் போதுமான படகுகள் நிறுத்தி வியாபாரிகளுக்கும் பிரயாணிகளுக்கும் சௌகரியங்கள் செய்திருந்ததோடு அங்கங்கே கால்வாய்கள் அகலமாக வெட்டி, நதிகளை ஒன்றோடொன்று பிணைத்து, போக்குவரத்து வசதிகளை இன்னும் அதிகமாக விருத்திசெய்திருந்தது. இதனால் பிரும்மாண்டமான மலைப்பிரதேசங்களில் விழும் மழைஜலத்தை அப்படியே பிரயோஜனமின்றியல்லது சுவற்பப்பிரயோஜனத்தை மாத்திரம் தந்துவிட்டுச் சமுத்திரத்தில் வீணாய்ப்போய்ப் பாயும்படி விட்டுவிடாமல், சந்திரகுப்தனுடையராஜாங்கம் அதையெல்லாம் ஜனங்களை ஒரு ஊரினின்று மற்றோர் ஊருக்குக் கொண்டுபோகும் வாகனமுமாகும்படி செய்துவிட்டிருந்தது. இந்த ஏற்பாட்டினால் நதிகளுக்கு நெடுந்தூரத்திலிருப்பதால் வானம் பார்த்தவையாகத்தானிருந்த பூமிகளும் கூட நிரந்தரமான நீர்ப்பாய்ச்சல் பெற்றுப்பெரும பலனைத்தந்தன.

(தொடரும்)

* [அடிக்குறிப்பு] குரோசம் என்றால் கால் யோசனை தூரம், யோசனை யென்பது தற்கால அளவுக்கு 8 அல்லது 9 மைல் இருக்கும்,

லாயிட் ஜ்யார்ஜ்.

ஸ்ரீமாந் V. R. சுந்தரராஜசர்மா அவர்கள்.

இப்பொழுது ஆங்கில மஹா ராஜ்யத்தின் பிரதான மந்திரியாக இருக்கிற லாயிட் ஜ்யார்ஜ் என்பவருடைய ஜீவசரித்திரத்தைத் தமிழ் உலகத்தார் அறிய வேண்டியது மிகவும் அவசியமேயாம்.

இவர் 'லிவர்ப்பூல்' நகரத்தில் இருந்த ஒரு சிறு பள்ளிக்கூட உபாத்தியாயரின் மகன். இவர் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபொழுது தந்தை இறந்துபட்டார். உடனே அவருடைய தாயார் தன் குடும்பத்தோடு சுதேசமாகிய உவேல்சுக்குச் (wales) சென்றாள். நமது ஜ்யார்ஜினுடைய பிற்காலப் பாதுகாப்பெல்லாம் தன் தாயின் சகோதரர் தலையிலேயே பொறுத்தது. ஜ்யார்ஜினுடைய அம்மான் ஒரு சாமனிய செருப்பு வியாபாரி. அவருடைய கடை பகற் பொழுது ஒரு வியாபார ஸ்தலமாயிருந்தாலும், இரவு அவ்வூராரெல்லாம் கூடும் பொதுக்கூட்ட ஸ்தலமாயிருந்தது. ஜ்யார்ஜின் அம்மானும் அவ்வூராரும் ராஜ்ய காரியங்களைப்பற்றி நடாத்தும் வாதப் பிரதிவாதங்களை நமது ஜ்யார்ஜ் வெகு ஆவலோடு கேட்டுக்கொண்டிருப்பாராம். இதனால் ராஜ்யகாரியவாதங்களில் ஜ்யார்ஜுக்கு இளமையிலேயே பற்றுண்டாகத் தொடங்கிற்று.

சிறுவனாயிருக்கும் பொழுதே ஜ்யார்ஜ் படிப்பில் மிகக் கவனம் செலுத்தி வந்தார். பிரஞ்சு பாஷையைக் கற்றுக்கொள்ள அவருக்கு மிக விருப்பம் உண்டென்பதை உணர்ந்த அவருடைய அம்மான், அவருக்குச் சொல்லிவைக்கும் பொருட்டுத்தானாகவே பிரஞ்சுபாஷையைக் கற்கத் தொடங்கினாராம். மருமகனைப்போலவே அம்மானுக்கும் படிப்பில் மிகப் பிரீதி. அவர் விவாகம் செய்துகொள்ளாததினால் வேறு பிள்ளைகளும் அவருக்கு இல்லாதிருந்தன. ஆதலால் தன் முழு நோக்கத்தையும், பணத்தையும், ஜ்யார்ஜையும், சகோதரர், சகோதரிகளையும் படிப்பிப்பதிலேயே செலவுசெய்து வந்தார். அவர்தம் மருமக்களுக்கு எப்பொழுதும் நல்ல புத்தகங்களைத் தெரிந்தெடுத்துக் கொடுத்து வாசிக்கத் தூண்டிக்கொண்டே இருந்ததினால் ஜ்யார்ஜினுடைய புஸ்தகப்பற்று நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வந்தது.

ஜ்யார்ஜுக்கு முதன் முதல் இன்பத்தைக்கொடுத்த புஸ்தகம் ருலின் (Rollin) என்பவர் எழுதிய புராதனசரித்திரமாம். அவர் வாலிப தசையை அடைந்த பிறகு அவருக்கு அதிகப்பிரீதியைக் கொடுத்தது Sartor Resartus என்னும் நூலே. கார்லையில் என்னும் பண்டிதசிரோமணி எழுதிய ஒரு வசன நூலை வாசிக்கத்தொடங்கினது முதல் அவர் ஒரு புது மனிதனானார். ஜீவிதத்தின் பொறுப்பும், பிரபஞ்ச வாழ்க்கையின் பெருமையும் அப்பொழுதுதான் அவருக்குத் தெளிவாகத் தோன்றின. மெக்காலே என்பவரின் இங்கிலாந்து சரித்திரம் அவரது உள்ளத்தில் அளவிடற்கரிய தேசாபிமான உணர்ச்சியை எழுப்பிற்று. 14 வது வயதில் வக்கீல் வேலைக்குப் படிப்பதற்கு அவசியமான ஆரம்பப் பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார். 16 வது வயதில் பள்ளிக்கூடப் படிப்பை நிறுத்தி, ஒன்றிரண்டு வருஷம் வீட்டிலிருந்தே புஸ்தகங்களை வாசித்து அறிவு விருத்தி செய்து கொண்டிருந்தார். பின்னர் Pcrtmador என்னும் பட்டணத்திலுள்ள ஒரு வக்கீலின் குமஸ்தாவாகி, 21 வது வயது வரை அத்துறையிலேயே அமர்ந்திருந்தார். கடைசியாக வக்கீல் வேலைக்குள்ள முடிவு பரீக்ஷையிலும் தேர்ச்சியடைந்தனர். அதுவரையிலும் அவருடைய படிப்புக்காக அவருடைய அம்மான் செலவாக்கின தொகை 800 பவுன்.

அப்பரீக்ஷையிலும் தேர்ச்சி யடைந்த பின்னர் அந்த நகரத்திலேயே ஒரு வக்கீலாக அமர்ந்தனர். உவேல்சிலுள்ள ஒரு கோயில் அதிகாரியினால்தான் நமது ஜ்யார்ஜின் பெயர் முதன் முதல் வெளிவந்தது. சுமார் 30 வருஷத்திற்கு முன் உவேல்ஸிலுள்ள ஒரு சிறு கிராமத்தின் மயான பூமியைச்சுற்றி சுவர்எழுப்ப ஜனங்களிடத்திலிருந்து வரிவசூல் செய்தனர். அதன் மிகுந்த பாகம் புராதன கக்ஷியைச் சார்ந்தவர்களாலேயே அளிக்கப்பட்டது. அப்படியே மதிலும் கட்டப்பட்டது. ஆனால் சிறிது காலத்தில் புராதன கக்ஷியாருக்குச் சிறிதும் சம்மந்தமில்லாத கோயிலின் சொத்தாகச்சேர்க்கப்பட்டது. Llanforthen என்னும் ஊரின் அதிபதி, வீணான காலதாமதம் செய்துவிட்டு, பணமுதவியவர்க்கு விரோதமாகவே தீர்ப்புச்செய்தார். இதனால் இறுமாப்படைந்த அந்தக் கோயிலைச் சார்ந்தவர்கள் வழக்கில் தோல்வி யடைந்தவர்களுக்கு இன்னல் விளைவிக்கப் பின்னும் விரும்பினர். இவ்வித நோக்கம் கொண்டவர்களில் கோயில் அதிகாரியும் ஒருவர்.

Mr. Osborne Margan என்பவரால் ஏற்படுத்தப்பட்ட அடக்கச்சட்டத்தால் (Burials act) புதிய கக்ஷியாரின் உரிமை ஒருவாறு போய்விட்டது. புராதன கக்ஷியாரின் பிரேதங்களை அடக்கம் செய்வதற்கிடம் கொடுக்குமாறு கோயில் அதிகாரிகளுக்கு முன்னறிக்கை கொடுக்கப்பட்டது. நியாயமாகச் செய்த ஏற்பாடு அக்கோயிலைச் சார்ந்தவர்களுக்கு விரோதமாய் முடிந்தது. அக்கோயில் அதிகாரி க்ஷாத்திரம் சாதிக்கப் பின்னும் எதிர் நோக்கியிருந்தார். இது இவ்வாறிருக்க, ஒரு ஏழைமனிதன் சாகுந்தருவாயில் தனக்குமுனிறந்துபட்ட மகளின் கல்லறையின் பக்கத்தில் தன்னையடக்கம் செய்ய வேண்டுமென பக்கத்திலிருந்தவர்களை வேண்டிக்கொண்டு உயிர் நீங்கினன். அவன் புராதன கக்ஷியைச்சார்ந்தவன். புதிதாக ஏற்பட்ட அடக்கச்சட்டத்தின்படி கோயில் அதிகாரிகள் புதைப்பதற்கு இடம் கொடுக்க வேண்டியதாயிற்று. கோயில் அதிகாரி, தன் வைரம் சாதிக்க இதுதான் தக்க சமயமெனவுன்னி தற்கொலை புரிந்து கொண்டோர் அடக்கம் செய்யப்படும் இடத்தில் கிழவனைப் புதைக்க ஏற்பாடு செய்தார். அதன்படியே கிழவனின் பிரேதம் அங்கேயே புதைக்கப்பட, கோயில் அதிகாரி தன் எண்ணம் நிறைவேறியதனால் இறுமாப்படைந்தான்.

மற்றும் அநேகரை எண்ணியது போலவே கோயில் அதிகாரி நமது ஜ்யார்ஜையும ஒரு பொருளாய் மதிக்கவில்லை. அப்பொழுது தான் அவர் வக்கீல் வேலையில் சிறிது பிரபலமாய்க் கொண்டிருந்தார். முன் நடந்த சம்பவங்களால் அதிக கோபமுண்ட அக்கிழவனுடைய பந்துக்களும், அண்டையயலாரும் இனியாது செய்வதென ஜ்யார்ஜை ஆலோசனை கேட்டனர். அவர் இவ்வழக்கை நன்றாய் உற்று நோக்கி, மயானச்சுவர் தன்னிடம் வந்திருப்பவர்கள் கொடுத்த பணத்தைச் செலவு செய்து கட்டப்பட்டதென அறிந்து, அவர்களைநோக்கி, “மயான பூமிக்குச் சென்று, கிழவன் அவமானமாய் அடக்கம் செய்யப்பட்டிருக்குமிடத்தினின்றும் பிரேதத்தை யெடுத்து அவனது மகளின் சமீபத்தில் புதையுங்கள். இதற்குக்கோயில் அதிகாரி இடந்தராவிடில் சுவரை இடித்துத் தள்ளிவிட்டுக் காரியத்தை நடத்திவிடுங்கள்” என்றார்.

இவ்வாறு தைரியப்படுத்தப்பட்ட அவர்கள் கோயில் அதிகாரியின் அனுமதி கேட்க அவர்கள் சம்மதிக்கவில்லை. அதனால் அவர்கள் ஜ்யாஜ் சொன்னது போலவே சுவரை இடித்துத்தள்ளி உட்சென்று கிழவனின் பிணத்தை அவனது மகளின் பிரேதத்தின சமீபத்தில் புதைத்துவிட்டனர். இதற்காகக் கோட்டில் வழக்கு ஏற்பட, உத்திரவன்னியில் உட்பிரவேசித்ததற்காக அபராதம் விதிக்கப்பட்டது. அதன் மேல் ஜ்யார்ஜ் இதை அப்பீலுக்குக் கொண்டுபோக அங்கு ஜூரிகள் (Jury) இவர்களை குற்றவாளிக ளல்லவென வெளியிட்டார். ஆனால் ஜட்ஜி கோயிலைச் சார்ந்தவர்களுக்கு வேண்டியவராகையால் இதற்குச் சம்மதியாமல் ஜயார்ஜுக்கு விரோதமாகவே தீர்ப்புச்செய்தார். கடையாக இந்த வழக்கு லண்டன்மா நகரின் பிரதான நியாயசபைக்குக் கொண்டுபோகப்பட, கோர்ட்டார் இதை நன்றாய் ஆராய்ந்துபார்த்து ஜ்யார்ஜிற்கு அனுகூலமாய்த் தீர்ப்புச் செய்தனர்.

இதனால் நமது ஜ்யார்ஜின் பெயர் அந்தப் பிரதேசம் பூராவும் பரவுதலாயிற்று. கோயிலைச்சார்ந்தோரின் அக்கிரமங்கள் அவரால் வெளியாயின. பார்லிமெண்டு (Parliment) மகா சபைக்கு பிரதிநிதியைத் தெரிந்தெடுக்கும் பொழுது, அவரும் ஒரு மெம்பராக எடுத்துக்கொள்ளப்பட்டார்.

முதல் இரண்டொரு வருஷத்திற்கு அவர் அவ்வளவாகப் பிரயாசை யொன்றும் எடுத்துக் கொள்ளவில்லை. அவர் சிற்சில சமயங்களில் மாத்திரமே பேசியிருந்தாலும். ‘உவேல்ஸ்’ ’பாஷையில் சபைநடுவே பேசும் திறம் அவருக்கு உண்டென்று யாவருக்கும் நன்றாய்த் தெரியும். ஆங்கிலம் நன்றாய்ப் பேசுவாராயினும், தனது தாய்ப்பாஷையிற் வெண்கலமணி அடித்தாற்போலப் பேசி யாவரையும் அகமகிழ்விப்பார். உவேல்ஸ் பாஷை தெரியாத் ஜட்ஜிகளை உவேல்ஸ் நாட்டில் நியமிக்கப்படாதென்பதைப் பற்றித்தான் அவர் பார்லிமெண்டில் முதன் முதல் பேசினார். 1892 ம் வருஷம் தேவஸ்தானக் காரியக்காரர்களின் நன்னடக்கைச்சட்டம் ஏற்படுத்தப்பட்ட பொழுதுதான் தன்னைச் சபையாருக்கு நன்றாய்த் தெரியப்படுத்திக்கொண்டார்.

1899-ம் வருஷம் வரை அவருடைய பெயர் வெளியில் அதிகமாய்ப் பிரஸ்தாபிக்கப்படவில்லை. இங்கிலாந்து தேசம், போவர் (Boers)களுடன் யுத்தத்திற்கு இறங்கிய பொழுது ஆங்குள்ள ஜனங்களில் அநேகர் யுத்தகாலத்தில் அரசாங்கத்தைத் தாங்கவேண்டுமேயன்றிவேறு யாதொன்றும் செய்வதற்கில்லை யென்று எண்

ணினார்கள். இதற்கு முற்றுமே மாறுபாடாக ஜ்பார்ஜ் எண்ணினார். இந்த யுத்தம் நியாயமில்லாததென்றும், அனாவசிய மெனவும், குற்ற மென்றும் அவருக்குத் தோன்றிற்று. பார்லிமெண்டு சபையின் கண்ணுள்ளவர்கள் யாவரும், விரோதிக்கு உதவிசெய்தாரென்று அவரை வெறுத்தனர். அவர் இதற்குச் சிறிதும் அஞ்சவேயில்லை.

ஒரு நாள் சாயுங்காலம் நமது ஜ்பார்ஜ் ஒரு தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது, அவர் மேல் மிகுந்த கோபமுள்ள தேசாபிமானி யொருவன் அவர் தலையில் நன்றாய் அடித்துவிட்டான். அதனால் அவர் மூர்ச்சித்துக் கீழே விழுந்து விட்டார். அவருக்கு இன்னல் விளைவிக்குமாறு இவ்வாறு செய்தது பின்னால் அவருக்கு நன்மையாகவே முடிந்தது.

லாயிட்ஜ்பார்ஜ் ஒரு கீர்த்திமான் என்பது இப்பொழுது யாவருக்கும் நன்றாய்த்தெரியும். சபையில் நின்று பேசுதலில் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். நியாயவாதியெனின் அவரையே கூறல்வேண்டும்; ஆழ்ந்த புத்தி நுட்பமும், விடாமுயற்சியும் உடையவர்; சுபமாய் எதையும் சாதிப்பதில் அவருக்கு யாரும் இணையாகார்; பிறருடைய மனதை எளிதில் அறிந்து கொண்டு அதன்படி நடக்கவல்லவர்; சுய நன்மையை நாடாது பொதுஜன க்ஷேமத்தைக் கோருவதில் சற்றும் இளையாதவர். பிரதான மந்திரியாக நாம் அவரை அடைந்தது நமது பாக்கியமே.

வி. ஆர். சுந்தரராஜசர்மா.

நாஞ்சிநாட்டு

மருமக்கள்வழி மான்மியம்.

(95-வது பக்கத் தொடர்ச்சி.)

கோடேறிக்குடி முடித்த படலம்

அடங்கா வீர
பத்திர பிள்ளை—பப்பாவி பாதகன், என்
குடியைக் கெடுத்த கொடிய சண்டாளன்
அரக்கன் ஏழரை ஆண்டைச் சனியன்
விரைவில் ஓடி வீட்டில் சென்று
மனைவியை அழைத்து மண்டையைக்காட்டி, உன்
அண்ணன் அடித்த அடிகளைப் பாரடி!
இன்றைக்
குயிர் போகாமல் இருந்ததுன் தாலிப்
பாக்கியம் தானடி பகவான் செயலடி
அவன், எண்ணிப்பாரா தேசின எச்சில்
கடுகள் வேணுமுன் காதில் விழுந்தால், நீ
நஞ்சைத் தின்பாய், நான்று சாவாய்
நாக்கைப் பிடுங்கி நடுங்கி யிறப்பாய்
ஆற்றில் குளத்தில் அலறி விழுவாய்
சங்கிலித் துறைபோய் சாடி யொழிவாய்
இதற்கோ ரையம் இல்லை இல்லையே.
என்னை, பறப்பயல் பள்ளப் பயலினும் கேடாய்
நினைத்துப் பேசின நீசன் இவனை
வாயில் மண்ணை வாரி யடித்து
வீட்டை விட்டு வெளியி லிறக்கின
அன்றைக் கல்லவோ ஆண்பிள்ளை யாவேன்”
என்று பற்பல இன்னும் சொல்லி
கோபா வேசம் கொண்டவ னானன்
கூட இருந்த குசும்பன் சாமி
போதா தென்று புகையும் போட்டான்
வீணாக் கதையை விரிப்ப தேனம்மா,
அப்பனும் மகனும் அண்டை வீட்டுக்
குசும்பன் சாமியும் குண்டுணிச் சுப்புவும்
கோட்டு மாடன் பிள்ளையும் கூடி
இரவு முழுதும் இருந்து யோசனை
பலவும் செய்து பலபல வென்று
விடியு முன்னம் விரைவா யெழுந்து
பானையில் கிடந்த பழவோலைகளும்
முறிப் பெட்டியிலுள்ள முன்னோலைகளும்,
கைச்சீட்டுகளும் கடச்சீட்டுகளும்
கைச்சார்த்துகளும் பொய்ச்சார்த்துகளும்
பத்திரச்சுருளும் பகர்ப்புச்சுருளும்
எல்லாம் சுமடமாய்க் கட்டியிரண்டொரு
முண்டைப் போட்டு மூடிப் பொதிந்து
தோளில் வைத்துச் சுமந்து கொண்டு
¶நாகையம் பதியை நாடிச் சென்றார்.
அங்கு
நீதிக் கெல்லாம் நிலைய மாகியும்
உண்மைக் கெல்லாம் உறைவிட மாகியும்

¶ நாகர்கோவில்

கருணைக் கெல்லாம் களஞ்சிய மாகியும்
வாழும் நியாய வாதிகள் தங்கும்
வீதியை முற்ற விலகிச் சென்று, வீண்
விவகாரங்கள் விளைநிலமாகியும்
பொய்களடைக்கலம் புகுமிடமாகியும்
குதர்க்கம் குடிகொளும் குகையிடமாகியும்
திருஅவதாரம் செய்தன்றிருந்த, ஓர்
அண்டப் புரட்டன் வக்கீலாப் பீஸில்
ஆளைப் பொய்யன் குமஸ்தனை யறிந்து
காரியம் சொன்னார் கதைகளும் சொன்னார்
காரணவனைப் பலகாரணத்தாலே
மாற்றும்படிக்கு வந்தோமென்றார்;
புற்றை விட்டுப் புறம் போகாமல்
பட்டினி கிடக்கும் பாம்பின் வாயில்
தேரை குதித்துச் சென்று விழுவது
நாக முன்செய்த நல்வினைப் பயனோ?
தேரை முன்செய்த தீவினைப் பயனோ?
ஈதெனச் சொல்ல எவரால் ஆகும்!
செல்லும் செலவு செய்திட ரூபாய்
நூற்றைம்பதுக் கோர் நோட்டு வக்கீல்
மைத்துனன் முத்து வாத்தியார் பேருக்
கெழுதி முடித்தார்; எடுத்து வந்த
ஆதாரங்கள் அனைத்தும் கொடுத்தார்
இவரிவர் ஸாக்ஷிகள் என்றும் சொன்னார்;—
வெள்ளை மடத்துக் கள்ள பிரானெனும்
மூத்த பிள்ளையே முதலாம் ஸாக்ஷி,
மாத்தால் கணக்கு மகராஜன் மகன்
பிச்சைக் காரன் பின்னொரு ஸாக்ஷி,
இருகணில்லா இருளப்பன் மகன்
முத்தொழி மறவன் மூன்றாம் ஸாக்ஷி,
ஐயம்பிள்ளை அண்ணாவி புதல்வன்
நல்லபிள்ளை நாலாம் ஸாக்ஷி
பொய்சொல்லா மெய்யன் புத்திரன் மாறி
ஆடும பெருமாள் ஐந்தாம் ஸாக்ஷி
நம்பர் பதித்த நாலா மாதம்
ஒருநாள் காலை உறக்கப் பாயில்
எழுந்தென் கணவர் இருக்கும் பொழுது
கறுப்பன் கட்டையன் கப்படா மீசைக்
காரன் ஒருவன் காலனைப் போல
கோர்ட்டுச் சமனைக் கொண்டு வந்தான்
நச்சுவாயண்ணன் நாச காலன்
வீரபத்திரன் வெட்டையாய்ப் போவான்
எண்ணினது போல எல்லாம் ஆச்சுதே!
நினைத்தது போல நேரம் விடிந்ததே!
இந்நாளிங்கு யான்படும் பாடெலாம், நாளை
அவரும் மக்களும் அநுபவிப்பார்கள்,
யாதும் தடையிலை யாதும் தடையிலை
பத்தினி என் சொல் பழுதாகாது,
உத்தமி என்சொல் ஊரையும் சுடுமே;
கேட்கும் கேட்கும் தெய்வம் கேட்கும்.
சேவகன் வந்த காரியம் தெரிந்தோ
இயல்பாய்த் தானோ யாதோ அறியேன்
மேல வீட்டிருந்து வெள்ளையம் பிள்ளை
அண்ணனும் அப்பொழு தங்கு வந்து
யாரிவனென்றனர்; இன்னாரென்றோம்
ஸமனைப் படித்து ஸங்கதி யறிந்தென்
புருஷனை நோக்கிப் "போன தெல்லாம்
போகட்டுமையா—பொய்கைப் பற்றில்
ஆறு தடியும் அணஞ்சி விளையும்
தாலுக்கன் தோப்பும் தொட்டிச்சி மேடும்
மேலத் தெருவில் மேடை வீடும்
ஈனை வரும் எழு பசவும்
யாதொரு கடனும் இல்லாமல் நீர்
இருக்கு மட்டும் யாப்பிய மாகவும்
அப்பால் அவற்றையுன் அருமை மக்கள்
ஒன்று விடா துகர்ந்துடமை யாகவும்
எடுத்துக் கொள்ள ஓர் ஓலை யெழுதி
உம்மை மக்களோ டொதுக்கி விடுவரேல்
வாங்கிக் கொண்டு வழக்கில் லாமல்
சும்மா இருப்பது மெத்தச் சுகமாம்.
இப்படி ராஜி எழுதிக் கொடுக்க
உமக்குச் சம்மத முண்டோ சொல்லும்
வியாச்சிய மென்னும் சுழியில் விழுந்து
கறகற வென்று கறங்கி மயங்கி
கைப்பொரு ளிழந்து கடனும் வாங்கி
வீணாய்த் துன்பம் விளைத்திட வேண்டாம்
அல்லலை விருந்துக் கழைத்திட வேண்டாம்
தொல்லைக்குத் தூது சொல்லிவிட வேண்டாம்
ஐயோ! கோர்ட்டுக் காரே போவார!
ஐயோ! கோர்ட்டுக் காரே போவார்!
பண்டொரு நீதிபதி, தன் கோர்ட்டு
வாயிலின் வந்த மனித ரெல்லாம்
உடைந்த ஓட்டை ஒருகையி லேந்தி

1 வக்கீல்கள்

வழக் கிழந்தவன் வாடி நிற்பதையும்
தாட்பொதி யொன்று தலையிற் சுமந்து
வென்றவ னுடலம் மெலிந்து நிற்பதையும்
கண்களால் கண்டு கண்டு நாளும்
நல்லறி வெய்திட நடை நடைதோறும்
இருபுறச் சுவரிலு மிரண் டுருவங்கள்
செய்து வைத்த கதை தெரியாதோ?
இழந்தவர் வென்றவர் இருவர் மீதியும்
இவைக ளன்றி வேறெவையு முண்டோ?
புத்தியிலா இரு பூனைகள் பண்டு
வானரத்திடம் போய் வழக்குச் சொல்லி
உள்ள திழந்து வேறுணவு மின்றி
வெறுங் கையாகி வெட்கி மீண்டதாய்
நாம், பள்ளியில் பாடம் படிக்க வில்லையோ?
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்
அரையடிச் சுவருக்காக ஐக்கோற்டு
வரையிலு மேறி வழக்குப் பேசி
அந்திர புரத்து மந்திரம் பிள்ளை
அழிவொடு கெட்ட கதைய மாட்டீரோ?
வடக்கு வீட்டு மச்சம்பியு மவர்
மருமக்களுமாய் வருஷமெட்டாக
மாறி மாறி வாதம் செய்து
யாவையும் போக்கி யிரவா வண்ணம்
இரந்து திரிவதை இவ்வூரில் நாம்
கண்ணுலின் றும் காணவில்லையோ?
வேலுப் பிள்ளை வீட்டு நம்பரில்
ஐந்தாம் ஸாக்ஷி ஆண்டி அவனை
அழுஅழப் படுத்தி அறுபது ரூபாய்
வாங்கிக் கொண்டு மேல் வாயிதாத் தோறும்
வீட்டுக் காரியம் வெட்ட வெளிச்சம்
மூட்டப் பஞ்சம் மூதேவி வாசம்
பானையிலே யுந் தரிசி யில்லை
உப்போ புளியோ ஒன்று மில்லை
உச்சிக் கெண்ணை ஒருதுளி யில்லை
தொட்டில் கட்ட துணியுமில்லை
காந்திமதிக்குக் கண்டாங்கி யில்லை
எனக்கும் வேஷ்டி யாதொன்று மில்லை
இப்படி யிருக்க எப்படி யுமக்காய்
கோர்ட்டில் மொழிநான் கொடுக்க வருவேன்
என்று சொல்லி எத்தனை பணத்தை
தட்டிப் பறித்தான் சண்டாள னப்பா!
முளைய நல் லூர் முதல்பிடிப் பிள்ளை
அண்ணனு மிப்படி யாகக் காரணம்
விளாத்திக் கோண விவகார மல்லவோ!
எத்தனை வகையை யிழந்தாரப்பா!
மூக்கரையன் விளை மூலையில் நிற்கும்
பலா மரமொன்றுமே பத்துக் குடும்பம்
தாங்கி மீதியும் தருமே யப்பா!
அந்த, மதினி, கழுத்தில் மங்கிலியம் தவிர
எல்லா நகையும் இறக்கி விட்டாளே!
ஒவ்வொரு காதிலும் உழக்குழக்குப் பொன்
இட்டிருந்தாளே! எல்லாம் போச்சே!
ஆளும் வேற்றாளாகி விட்டதே!
கருந்தாளி உலக்கை கையி லெடுத்தவள்
கோவில் நெல்லைக் குத்துவா ளென்று
யாவராயினும் எண்ணின துண்டா?
என்ன செய்வாள் ஏழை! பாவம்!
கட்டியும் குட்டியும் நாழியு முழக்குமாய்
ஏழு மக்களை எப்படி வளர்ப்பாள்?
கோர்ட்டு வழக்கு கொஞ்சமா செயயும்
இதுவும் செய்யு மேலெதுவும் செய்யும்
கட்டுக் கட்டாய் காய்கறி அனுப்பவும்
வல்லம் வல்லமாய் மாம்பழ மனுப்பவும்
பானை பானையாய் பால் நெய்யனுப்பவும்
மந்தை மந்தையாய் மாடுகளனுப்பவும்
வண்டி வண்டியாய் வைக்கோ லனுப்பவும்
யாரால் முடியும்! யாரால் முடியும்!
எந்தக் குடும்பம் ஈடு நிற்கும்?
ஐயா
வழக்கு மிழந்து வகையு மிழந்து
யாவு மிழந்துளம் ஏங்கி யிருக்கும்
கைலாசம் பிள்ளை கரையாளன் வீட்டை
வக்கில் பீஸு பாக்கி வகையில்
எழுபது ரூபாய்க் கேலம் கூறிக்
கொட்டுக் கொட்டிக் கொண்டு போனதும்
நேற்றுத்தானே நினைவுமில்லையோ?
இந்த மாஸம் எட்டாம் தேதி
மேலத் தெருவில் *.....................வீட்டில்
ஜப்திக்கு வந்த தலைவன் ஐயோ
எள்ளள வேனு மிரக்கமில்லாமல், அந்தக்
கிழவனைத் தூக்கிக் கீழே போட்டுக்
கட்டிலை வெளியில் கடத்தச் சொன்னதும்
தண்ணீர் குடிக்கும் ஸமயம் பார்த்துப்
பிள்ளைக் கெண்டியைப் பிடுங்கச் சொன்னதும்

* பொடிவு

சருவம் பானை சட்டுவம் அகப்பை
குட்டுவம் செம்பு குழியல் முதலாய்
உப்போடு சிரட்டை ஒன்று மில்லாமல்
எல்லாம் வண்டியி லேற்றிச் சென்றதும், நாம்
கண்ணாற் கண்டதோ? கனவோ? ஐயா!
நாமெல்லாம் சேர்ந்து நடத்தின கக்ஷிக்
கொடையில் மாடன் கொண்டாடி நம்பி
சந்தனம் பூசி சல்லடம் கட்டிப்
பூவை யெடுக்கப் போன பொழுது
வாறண்டுக் காரன் வந்ததை யறிந்து
குட்டிச் சுவரெலாம் குதித்துச்சாடி
வாய்க்கால் வழியாய் வடக்கே யோடி
ஒருவரும் காணா தோச்சன் குளத்து
மடைக்குட் சென்று மறைந்து கொண்டதும்
சாமி சுடலைச் சாம்பலி லாடி
விளையாடுதற்கு வேகமாய்ப் போகிறார்.
என்று நினைத் தங்கிருந்தவ ரெல்லாம்
எழுந்து போனதும், எங்கும் தேடிக்
காணா தானதும், கடைசியி லுண்மை
தெரிய வந்ததும் செலவொடு செலவென்
றேழு ரூபாய் எண்ணிக் கொடுத்து
வாறண்டை யன்று மடக்கி விட்டதும்
நடந்த காரியமோ? நாடகந் தானோ?
வியாச்சியம் வேண்டாம் வியாச்சியம் வேண்டாம்
தேடின முதலைத் தெருவில் வாரி
இறைக்க வேண்டர்ம் இறைக்க வேண்டாம்
அல்லும் பகலும் அலுப் பில்லாமல்
ஆஆ வென்றலை ஆமீன் வாயில்
அகப்பட்டார் வெளி யாவது முண்டோ?
சுறா மீனையுமே தூக்கி விழுங்கும்
பொல்லா மீனிது போலொரு மீனைக்
கடலிலும் கூடக் கண்டவ ரில்லை
"எவரினும் பெரியவன் யானே ஆவேன்
எப்பெரு வேலையும் எளிதில் முடிப்பேன்
இம்மிருகத்தையும் எடுத்தொரு நொடியில்
வானெலாம் சுற்றி வருவதற் குள்ள
ஆற்றலு முடையேன்; ஆனா லத்திறம்
அனைத்தையும் வெளிப்படை யாகக் காட்ட
அற்பமும் ஆசை யெனக்கிலை, அன்றியும்
உருவமோ நீளமோ உயரமோ கண்டே
மூட உலகம் மோசம் போகும்;
ஆதலா லொருவரும் அறியா திருந்திந்
நாலுகை யானை* நடத்து கின்றேன்"
என்றதன் முதுகிலிருக்கும் ஈயொன்
றெண்ணுதி டம்பம் எடுத்துரைப்பது போல்
இரவும் பகலும் இடை விடாமல்
பற்பல வருஷம் படித்துப் பீ-எல்
எம். எல் பட்டம் எல்லாம் பெற்று
வந்திடும் பெரிய வக்கீல் மாரும்
யாங்களில்லை யேல் என் செய்வாரெனப்
புத்தி யிலாது புலம்பித்திரியும்
குமஸ்தா வெனும் ஈக்கூட்டம் உம்மைக்
குத்தி ரத்தம் குடித்திடு மையா
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்
குதித்துக் குடியைக் கெடுத்திட வேண்டாம்
"இன்னபடி யென் றெழுதி விட்ட
சிவனே வரினும் சிறிது மஞ்சேன்
விதியினுக் காயிரம் விக்கினம் சொல்வேன்
வருகிற வழியாய் வந்தெனைக் கண்டால்
சிக்கெலாம் போக்கித் தீர்ப்பையும் நடத்தித்
தருவே" னென்று சற்றும் வாய்கூசா
துரைக்கு மந்த உத்தம புருஷன்
நிறையா வயிற்றை நிறைத்திடக் கடலைத்
திறந்து விட்டாலும் திகையுமோ ஐயா.
வீட்டை விட்டு வெளிவரா உமக்குக்
கோர்ட்டுக் காரியம் கொஞ்சமும் தெரியுமோ?
பாரப் படிகளும் பட்டிகைப் படிகளும்
ஸாக்ஷிப் படிகளும் ஸமன்ஸுப் படிகளும்
கணக்கி லடங்கா கமிஷன் படிகளும்
ஜப்திப் படிகளும் லேலப் படிகளும்
வாறண்டுப் படிகளும் வாசற் படிகளும்
ஏணிப் படிகளும் இப்படி அப்படி
எல்லாப் படிகளும் ஏறி யிறங்கி
வாணாள் கொடுத்து வாண தீர்த்தம்
ஆட ஆளும் நீரோ ஐயா?
கோர்ட்டுப் பீஸு குமஸ்தாப் பீஸு
கூடிக் காப்பி குடிக்கப் பீஸு
வெற்றிலை வாங்கிட வேறொரு பீஸு
வக்கீல் பீஸு மகமைப் பீஸு
வக்காலத்து வகைக் கொரு பீஸு
எழுதப் பீஸு சொல்லப் பீஸு
எழுதின தாளை எடுக்கப் பீஸு
நிற்கப் பீஸு இருக்கப் பீஸு

*வக்கீலுக்கும் யானைக்கும் சிலேடை

நீட்டின கையை மடக்கப் பீஸு
பாரப் பீஸு கிரப் பீஸு
பார இழவு பயிற்றுப் பீஸு
கண்டு பீஸு காணுப் பீஸு
முண்டு துணிக் கொரு முழுமல் பீஸு
அந்தப் பீஸு, இந்தப் பீஸு
ஆனைப் பீஸு பூனைப் பீஸு
ஏறப் பீஸு, இறங்கப் பீஸு
இப்படியாக என்றென் றைக்கும்
பீஸு பீஸாய்ப் பிச்சுப் பிடுங்கும்
கோர்ட்டில் சென்று குதித்திட வேண்டாம்.
குதித்துக் குடியை முடித்திட வேண்டாம்.
மூவுல கேத்து மூவரும் நாணப்
பொது ரிக்கார்டுப் புரையில் தனியாய்—ஓர்
*மூலையில் இருந்து முத்தொழிலியற்றும்
தெய்வத்தின் இரு சேவடி நிதமும்
கண்டு தொழுது காணிக்கை யிட்டு
வணங் காதவர்க்கு வரும் தோஷங்கள்
இத்தனை யென்றிட யாரால் முடியும்?
இதற்கெலாம் முதலுக் கெங்கே போவீர்?
வஞ்சியை முறித்து வாரப் போவீரா?
வாதி பாகம் வக்கீல் உம்மைக்
கூட்டில் ஏற்றிக் குறுக்கு மறுக்காய்
கிறுஸு கேட்டுக் கிடுக்கி விடுவான்.
ஸந்தேக மில்லை ஸந்தேக மில்லை, நீர்
அண்டப் புரட்டனை அறிய மாட்டீர்
புத்தியில் பெரியவர் பொல்லாத வம்பர்
ஆளும் தரமும் அறிந்திட வல்லவர்
சீரும் திறமும் தெரிந்திடச் சமர்த்தர்
ஆடிக் கறப்பதை ஆடிக் கறப்பார்
பாடிக் கறப்பதைப் பாடிக் கறப்பார்
தயவாய்ச் சொல்வார் தக்கில் கேட்பார்
இரைந்து சொல்வார் எச்சில் எழும்புவார்
பார் பார் என்பார் பல்லைக் கடிப்பார்
போருக்கு நிற்பார் புலிபோல் பாய்வார்
அங்கும் இங்கும் அசையாதே என்பார்
குனியாதே என்பார் கோட்டைப்பார் என்பார்
கோட்டையும் கூடக் கூட்டாக்காமல்
கேள்விகள் பலவும் கேட்க வருவார்
ஓடும் குதிரைக் குச்சியில் கொம்புகள்
ஒன்றா இரண்டா உடன் சொலு மென்பார்,
ஏாம், குதிரைக்கேது கொம்புக ளென்றால்
அது, கோர்ட்டலக்ஷியக் குற்றம் என்பார்

'கேள்வியை நன்றாய்க் கேட்டுச் சொல்லும்
இரண்டா? ஒன்றா? என்பதென் கேள்வி.
உண்டா இல்லையா என்று நானும்மிடம்
கேட்டேனா ஓய்? காது கேட்காதோ?'
என்றெலாம் சொல்லி ஏமாற்றி விடுவார்.
குண்டில் விழுந்த குள்ள நரியைப்
படுத்தும் பாடெலாம் உம்மைப் படுத்துவார்.
இவர்
நரங்கிகளை எடுத்துச் சொன்னால்
பீரங்கிகளும் பின்னிட் டோடும்
பொல்லாதவரவர் பொல்லாதவரவர்
இந்த வக்கிலுக் *கேழரை நாட்டனும்
இணை யாவாரோ? இணை யாவாரோ?
அறிந்து பிழையும் அறிந்து பிழையும்.
சொந்த வீட்டில் துரும்பையும் தூக்கி
எறியச் சற்று மியலா தென்பவர்
வக்கில் வீட்டில் வரிக்கல் பிடுங்கப்
போவது மெத்தனை புத்திகேடையா!
தங்கை மக்கள் தரித்திர மடைந்து
வயிற்றுக் கின்றி வாடி யலைய
வருக்கை மாம்பழம் வாழைப் பழமும்
பெட்டிப் பாலும் பிஸ் கூத்துகளும்
ஊரார் மக்கள் உண்டு களித்திட
வாங்கிச் செல்வது மதியுளார் செயலோ?
மேடும் காடும் வெட்டித் திருத்திப்
பாறையு முடைத்துப் படுநில மாக்கிப்
பருவ மறிந்து பண்பட உழுது
மண்ணல முணர்ந்து வளமிகப் பெய்து
வாசிறை மிண்டான் வளரச் செய்து
சம்பாப் பயிரைத் தழைக்கச் செய்து
கால காலத்தில் களைக ளெடுத்து
வேலியைக் கட்டி விலங்கினம் விலக்கிப்
பறைகளைக் கொட்டிப் பறவையை ஓட்டி
நீரும் பாய்ச்சி நிதமும் இராப்பகல்
உறக்க மின்றி உழைப்பதி னாலே
விளையச் செய்த மேனிநெல் எல்லாம்
வக்கில் வீட்டு வாயிலில் கொண்டுபோய்
விரித்துக் காய்ச்சி வீசித் தூற்றி
அளந்து வாரி அறைக்குட் போட்டு
வெறுங் கையோடு வீடுபோய்ச் சேரும்
நம்மவர் போலிந் நானிலத் தெங்கும்
ஒருவ ரேனும் உண்டோ ஐயா!
மூச்சை யடக்கி முக்குளி போட்டுக்

*இல்லாததை உண்டுபண்ணல், உள்ளதை அழித்தல், காத்தல்

*The Tamilianised form of Eardley Norton.

கீழுலகம் போய்க் கிடைத்த சிப்பியை
வாரி யெடுத்து மேலே வந்திடும்
முழுக் காளியினிடம் முத் தொன்றேனும்
இருப்பது முண்டோ? எண்ணிப் பாரும்!
படிப்பிலார் தேடும் பற்பல பொருளும்
படித்தவர் வீட்டையே பார்த்துச் செல்லும்
*மூடர் முதலெலாம் வக்கீல் முதலாம்
ஐயமிதற் கில்லை ஐயமிதற் கில்லை
ஐயா! ராஜி ஆவதே உத்தமம்!
ஐயா! ராஜி ஆவதே உத்தமம்!!
மருமக்கள் வழி வழக்கு மிந்நாட்டில்
விடுவிடா யொரு கோடி ருந்தாலும்
வழக்குகட் கோய்வு வருமோ ஐயா"
என்றிவை யெல்லாம் எடுத்துச் சொல்லி
இறங்கிப் போனார். இக்கதை யெல்லாம்
நாலாம் மனைவி நாடகக் காரியின்
மாமன் மகனொரு வக்கீல் குமஸ்தன்
அறிந்து வந்தான். "அண்ணே! அந்த
வெள்ளையம் பிள்ளைக்கு வேலை யில்லை
காடு கூப்பிடுது, காலம் வாவில்லை
வீடு போக்கிடுது, வேளை வரவில்லை
கூனக் கிழவன் கோர்ட்டு வழக்கில்
என்ன அறிவான்? இவன் பேச்சையு மொரு
காரியமாகக் கருதிட லாமோ?
செல்வமும் கல்வியும் செழித்த நாட்டில்
வியாபாரங்கள் மிகுந்த நாட்டில்
உழைப்புகள் பற்பல ஓங்கிய நாட்டில்
வழக்குகள் நிதமும் வளர்ந்து வருவது
ஸகஜம் என்று ஸ்தாபித்திட நான்
'அத்தாரிட்டிகள்' ஆயிரம் காட்டுவேன்.
அண்டப் புரட்டன் வக்கீ லென்ன
ஆளைத் தூக்கி விழுங்கிடு வாரோ?
இவர்வீச செலலாம யாரிடம் செல்லும்?
ஏழை பாவம யாவரேனும்
வந்தால் கொஞ்சம வாலை முறுக்குவார்,
அன்றி
பதிவு ஸாக்ஷி பலவேசம் பிள்ளை
கூட்டாளிகளைக் கூட்டிற் கண்டால்
வாயைத் திறவா மௌனம கொள்வார்
பேடியைக் கண்ட பீஷ்மரு மாவார்
அண்டமும் கோழி அண்டமாய் விடும்
உருட்டும புரட்டும் ஒழிந்து போய்விடும்
அண்ணன் எதற்கு மஞ்ச வேண்டாம்
எது வந்தாலும் யானிருக்கின்றேன்
என்னை
அண்ணன் நன்றாய் அறிய மாட்டீர்
இந்துலாவில் எழுத்துக ளித்தனை
மகம்மத லாவில் வரிக ளித்தனை
என்று சொல்ல எனக்குத் தெரியும்
*தி. பி. கோவைத் திருப்பித் திருப்பிப்
பாரா இரவும் பகலும் இல்லை
சுருக்கி உம்மிடம் சொன்னால் போதுமே
சட்ட மெனக்குத் தலைகீழாய்த் தெரியும்
நடைபடி யெல்லாம் நன்றாய்த் தெரியும்
இரண்டு கையா லெழுதத் தெரியும
அரை நிமிஷத்தில் அநியாயங்கள்
ஐம்பதைக் கோர்ட்டி லாக்கத் தெரியும்
பட்டிகை எழுதப் பாரம் போட்டக்
கெட்டி கெட்டி என்று பேர் கேட்ட
ஏட்டுக் குமஸ்தன் யானே யாவேன்
ஜாடை காட்டி ஸாக்ஷிகளுக்குத்
தெரியாக் காரியம் தெரியச் செய்ய
என்னைப் போலிங்கு யாருண்டையா?
கக்ஷிகள் வந்தென் கையில் தந்த
பணத்தைச சொந்தப் பணம் போலெண்ணி
வாங்கிப் பெட்டியில் வைத்துக் கொள்வேன்
சிறிது மோசம் செய்திட மாட்டேன்
வக்கீல் குமஸ்தன் ஸத்தியவாசகன்
இன்னு ரொன்றிந் நாடெலா மறியும்.
ராஜியும் வேண்டாம் கீஜியும் வேண்டாம்
நானே கேஸை நடத்தி ஜயமும்
வாங்கித் தருகிறேன் மலைக்க வேண்டாம்
என், வக்கீல் பேர்க்கொரு வக்காலத்தை
எழுதிப் போடும்" என்றெலாம் சொல்லி
இந்திர ஜாலம் மந்திர ஜாலம்
மகேந்திர ஜாலமும் வலல இம்மனிதன்
நாட் பணமாக நாலு ரூபாயும்
வக்காலத்தும் வாங்கிச் சென்றான்.
'அர்ஜி கொடுத்தேன் அவதி மாற்றினேன்
பிராது உத்தரமும் பேஷாய்க் கொடுத்தேன்
கேஸில் ஜயமும் கிடைக்கும் நிச்சயம்'
என்று வார்த்தைகள் இதமாய்க் கூறி
இடையிடை ரூபாய் இருபது முப்பது
தட்டிக் கொள்வான்—தலைவிதி! தலைவிதி!
கொடுத்து வைத்தவர்கள் கொண்டு போனார்கள்.

*Fools make the Lawyers rich—Proverb.

* தி-பி-கோ- Travancore Penal Code.

என்விதி யாதும இப்படி யானேன்
காகைக் கோர்ட்டில் கேஸு நடந்தது
நடந்தது நடந்தது காலரை வருஷம
ஐயோ தெய்வமே! ஐயோ தெய்வமே!
இரவும பகலும் இன்றி யென்புருஷன்
பட்ட பாடெல்லாம் பகர்வது மெளிதோ?
திங்கட் கிழமை தெரிசனம போசசு
திண் டாட்டங்கள் திரா தாச்சு
வெள்ளிக் கிழமை விரதம் போச்சு
விவகாரங்கள் மிகவே யாச்சு
குளியும போச்சு குமபிடும போச்சு
கோர்ட்டு வாசல் குடியிருப் பாச்சு
*மாதாந்தங்கள் மறந்தே போச்சு
வக்கி லாப்பீஸ் வாழிட மாச்சு
உயர்ந்த மேடை உறைவிடம் போச்சு
ஒட்டுத் திண்ணை உறங்கிட மாச்சு
மெத்தை திண்டு விதானம போச்சு
விரிக்கும் பாய அவர் மேல் முண்டாச்சு
துப்பட்டாவும் தொங்கலும் போச்சு
துவர்த்து முண்டும் துணியுமே ஆச்சு
புட்டும் பழமும் காப்பியும் போச்சு
புளித்த காடியும் போது மென் றாச்சு
தோசை இட்டலி தோய்ப்பதும் போச்சு
தொந்தியும கரைந்து சுருங்குவ தாச்சு
ஸுகந்தத் தூளும் ஸோப்பும் போச்சு
சும்மா சிரங்கு சொறிவது மாச்சு
சிலைக் குடையும செருப்பும் போச்சு
தின்மும வெயிலில் திரிவது மாச்சு
அழகு வண்டியு மாட்டினத்தும் போச்சு
அஞசு வோட்டம அவர்க்கே யாச்சு
மட்டிலாக் கவலை மனதிற்குடி கொண்டது
அளவிலாத் துன்பம் அடிமை செய்தது
ஐயோ யாங்க ளனைவரும் அந்நாள்
அடைநத துயரெலாம யாரே அறிவார்?

(வேறு)

குலக்குறத்தி வரினு மொரு கோடங்கி வரினும்
குறிகேட்டுப் பொருள் விரிதது கொண்டிருந்தோம் அம்மா
துலக்கமுறப் பால்பாத்திச் சோசியர்கள் கணித்துச்
சொன்னவைக ளுண்மையென்று துணிந்திருந்தோம் அம்மா. (1)

பதியிருக்கும பதியெங்கும் பதிவாகச் சென்று
பால்வைத்துக் கணக்குகளும் பார்த்து வந்தோமம்மா
திகைக்கு மெனக்காணி கொடை நடக்கும் காலம்
கடாத்தறித்துப் பொங்கலிட்டுக் காத்திருந்தோம் அம்மா. (2)

குறத்திசொன்ன குறியெல்லாம் குறிதவறிப்போச்சே!
கோடங்கி குறியாலும் குணமில்லாதாச்சே!
நிறுத்துரைக்கும நிமித்திகரின் நிமித்தங்களிந்நாள்
நினைக்கும போதுளம் வெந்து நீறுகுதம்மா. (3)

பதித்தலத்துப்பால் வைத்தும் பயனடைந்தோமில்லை
பலிகொடுத்தும தேவியருள் பாலித்தா வில்லை
விதித்தவிதி தானிருக்க வேறுவிதி வருமோ
விம்மியினி யழுவதெல்லாம் வீணலவோ அம்மா. (4)

(வேறு)

இப்பெரும் கஷ்டம் யாரே படுவார்
கணவர்
அல்லும் பகலும் அலைந்து சடைத்தார்
எலும்பும் தோலு மாக இளைத்தார்
இருமல இழுப்புக் கிருப்பிடமானர்
எதிலும விருப்பம் இல்லாதானர்
வெளியூர்ப் போக்கை விட்டே விட்டார்
உள்ளூர் மட்டும் உலாவி வந்தார்
சிலநாள் பின்னும் செல்லச் செல்லத்
தெருவில் மாத்திரம திரிவா ராயினர்
படிப் படியா யிப்படியவா பாடு
குறைந்து குறைந்து கொண்டே வந்து
அண்டை வீடாகி அறைப் புரையாகி
படிப்புரை யாகிப் பாயிலு மானர்
எழுந்து நடக்க இயலாதானர்*
நடந்தவர் கீழே கிடந்தாரம்மா.

(தொடரும்)

* ஒவ்வொரு மாதக்கடைசியிலும் ஒரு குறிப்பிட்டதினத்தில் ஏதேனும் ஆலயத்திற்குத் தரிசனம் செய்யப் போதல்.

* நாராயணசாமிபதிகள் அல்லது கோயில்களை நாஞ்சிநாட்டிலுள்ள பல ஊர்களிலும் காணலாம். அப்பதிகளில் சிறப்பு நடத்துவதற்குப் 'பால் வைத்தல்' என்று பெயர். பதி கொண்டாடி சன்னதம் கொண்டு அடிமைகளுக்கு வருங்காரியம் கூறுவது 'கணக்குப்பார்த்தல்' எனப்படும்.

கண்ணபிரானும் கிழவனும்.

ஸ்ரீமாந் V. R. சுந்தரராஜசர்மா அவர்கள்.

ஓர் ஊரில் இருந்த கிழப் பிராமணனொருவன் தன்னை மற்றவர்கள் ஓர் பெரிய பக்தனாக நினைக்குமாறு நடந்துவந்தான். அவன் என்ன காரியம் செய்தாலும், "கிருஷ்ணா! கிருஷ்ணா! இது உன் செயல்" என்று சொல்வது வழக்கம். ஒருநாள் கொஞ்சம் நெல் வெயிலில் காயுமாறு அவனுடைய வீட்டுவாயிலில் விரிக்கப்பட்டிருந்தது. அதை ஒரு பசுவந்து தின்றது. உடனே பிராமணன் ஒரு தடியெடுத்து வந்து அந்தப் பிராணியை நன்றாய்ப் புடைக்க அது அங்கேயே விழுந்து உயிரைவிட்டது. உடனே அந்த பிராமணன் "ஹரி! ஹரி! கிருஷ்ணா! கிருஷ்ணா! இது உன் செயல்" என நவின்றனன். இச்சமயத்தில் கண்ணனுடனிருந்த ருக்மணி இதைக் கேட்டுவிட்டு, "நாதா! என்ன பாவம் உம்மைச்சூழ்ந்துகொண்டது" என்றாள். "என்னருமைக் கண்ணாட்டி! நீ அஞ்சவேண்டாம். பசுவைக் கொன்ற பாவம் என்னைச் சேர்ந்ததல்ல. அதை நான் ரூபிக்கின்றேன்" எனக் கோபாலன் சமாதானப்படுத்தினான்.

சில நாட்கள் கழிந்து அந்தக் கிழப்பிராமணன் வேதியர்கட்கோர் விருந்திட்டான். இச்சமயத்தில் கிருஷ்ணபரமாத்மா, ஆபாசமான ஓர் கிழப்பிராமண வடிவுகொண்டு விருந்துநடக்கும் வீட்டிற்குச் சென்று கபத்தினால் உபத்திரவப்படுகிறமாதிரி அவ்விடமெல்லாம் எச்சிலை உமிழ்ந்து அசுத்தப்படுத்தினார். அச்சமயத்தில் விருந்து நடத்தும் பிராமணன் அவ்விடத்திற்குவந்து, "இதுதான் நான் செய்யும் தருமத்திற்குப்பலனோ? நான் செய்யும் விருந்தை வீணில் ஏன் கெடுக்கின்றாய்?" எனக் கோபிக்க, மாறுவேடம் புனைந்த கண்ணபிரான் "இவ்வாறு என்னைக் கோபிப்பதற்கு நீ யார்? நீ தான் உண்மையில் இந்த விருந்து நடத்துகிறவனோ?" எனக் கேட்டான். இதனால் அந்தப் பிராமணன் கடும் சீற்றம் கொண்டு "இந்த விருந்துக்குக் கர்த்தா யானே யென்று முன்னமேயே கூறவில்லையா? நான் யாரென்று காண்பிக்கின்றேன்" என்று சொல்லிக்கொண்டு, பகவான் கழுத்தில் கையைக்கொடுத்து வெளியில் தள்ளினான். உடனே மாயன் தன் சுய உருவத்தை அவனுக்காட்டி "இந்த விருந்தால் வரும் புண்ணியம் உன்னையும், பசுவைக்கொன்ற பாவம் என்னையும் சேரவேண்டும்போலும், இரண்டும்" உன்னுடையதாகவே இருக்கட்டும் எனக் கூறி மறைந்தார்.

இதேபோல் அநேகர் நன்மையை தங்கள் முயற்சியால் கிடைத்ததாகவும், இன்னல் உற்றுழி கடவுளுக்கு இரக்கமில்லையெனவும் கூறியலைகின்றனர்.

வி. ஆர். சுந்தரராஜசர்மா.

Mr. Montagu's Indian Speeches.

As a companion volume to "Morley's Indian Speeches," Messrs. G A. Natesan & Co., of Madras, will issue shortly a comprehensive and up-to-date collection of Mr. Montagu's speeches on Indian subjects. The collection will include Mr. Montagu's Budget Speeches in the House of Commons when he was Uuder Secretary to Lord Morely at the India Office. It will include also Mr. Montagu's Guild Hall Speech on "Indian affairs"; "Indian Land Policy" delivered at the Liberal Colonial Club, London, and several other papers. The collection is brought up-to-date with the full text of his Speech in the House of Commons on the Report of the Mesopotamian Commission only a few days before his appointment as Secretary of State for India. Every effort is made to make the collection as exhaustive as possible.